ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கஎ] பிரமாதி—பங்குனி [பரல்-கஉ

சங்ககாலப் பெண்மணிகள்

[திருவாட்டி கண்ணம்மாள் அம்மையார்]

தமிழ்ப் புலவர்கள் முதல், இடை, கடைச் சங்கங்களை முறையே பாண்டிய நாட்டுத் தலைநகரங்களான தென் மதுரை, அலைவாய் (கபாடபுரம்), (இன்றைய) மதுரை என்னும் மூன்றிடங்களில் கூட்டித் தமிழை வளர்த்தார்கள் என்பதை இறையனார் களவியல் உரை முதலியவற்றால் அறிகிறோம்; ஆனால் இன்று அம்முச்சங்க கால இலக்கண இலக்கியங்களை நூல்வடிவிற் காண்கின்றோம் இல்லை. பல அழிந்துபட்டன என்பர். இன்று கிடைத்துள்ள முழுநூல்கள் சிலவே. பல நூல்களின் சிதைந்த சிறுசிறு பாகங்கள் உரையாசிரியரால் தரப்பெற்றுள. இந்நிலையில், இன்று தொகைநூல்களிலும் பிற நூல்களிலும் காணப்படும் புலவர்கள் எந்தெந்தக் காலத்தைச் சேர்ந்தவர்கள் என்று முற்றும் வரையறுத்துக் கூற முடியவில்லை. சில புலவர்கள் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டினர் என்பதைச் சரித்திரத் துணிபுகொண்டு கூறலாம். ஏனைய புலவர் காலங்களை அறுதியிட்டுக் கூறல் இயலாது. எனவே, 'சங்ககாலப் புலவர்கள்' என்போர் முதல்-இடை-கடைச் சங்ககாலப் புலவர்கள் எனக் கோடலே இன்றைய நிலையில் ஏற்புடையதாகும். அங்ஙனமே 'சங்ககாலப் பெண்மணிகள்' என்பவரும் ஆவர்.

பண்டைத் தமிழகம் ஆண்-பெண் உயர்வு இழிவுகளைக் கண்டறியாதது; சாதிப்பூசலை அறியாதது; சமயப்பூசலை அறியாதது. ஆடவர்-பெண்டிர் ஒரேநிலையில் கல்வி கற்று, வினையாற்றி, இல்லறம் நடத்திவந்தனர். அதனாற்றான் அச் சங்ககாலப் பெண்மணிகள் ஏனைய தொல்காப்பியர், நக்கீரர், கபிலர் போன்ற நல்லாணைத் தொல்லாசிரியர் போலப் புகழ்

வாய்ந்த புலவர்களாக இருந்தார்கள்; முச்சங்கங்களிலும் ஆடவருடன் சரிநிகர் சமானமாக இருந்து பலநூல்களையும் பாடல்களையும் ஆடவரைப் போலவே இயற்றித் தமிழ்மொழிக்குத் தம்பகுதிக்குரிய தொண்டு செய்தார்கள். சங்க காலத்தில் தமிழ்ப் பெண் உலகம் பெருமை பெற்றிருந்தது.

இங்ஙனம் புலமை பெற்றிருந்த பெண்பாலர் பல திறத்தினர் ஆவர். அவருள் அரசமாதேவியார் உண்டு; வேளாளப் பெண்டிர்உண்டு; வணிகப்பெண்டிரும் உண்டு; குறமகளிர் உண்டு; குயமகளிர் உண்டு.—ஏன்? எல்லாத் தொழிலையும் செய்துவந்த பலதிறப்பட்ட பெண்பாலரும் அக்காலத்தே பீடுபெற்ற பெரும் புலவர்களாக விளங்கினர். இன்றைக்குள்ள சங்கநூல்களில் பெண் புலவர் தொகை ஏறக்குறைய ஐம்பது என்னலாம். அவருள் சிலரைப்பற்றிய செய்திகளைமட்டும் ஈண்டுக் காண்போம்:

காக்கை பாடினியார்

இவர் யாப்பிலக்கண நூல் செய்த பெண் புலவர் ஆவர். செய்யுளின் இலக்கணத்தைப்பற்றிக் கூறுவது 'யாப்பிலக்கண நூல்' எனப்படும். இவர் இந்நூல் ஒன்று செய்ததாக 'யாப்பருங்கல விருத்தி' என்னும் நூல் உரையால் அறிகிறோம். அந்த உரை இவர் நூலைப் பல இடங்களிலும் பாராட்டிக் கூறுவதிலிருந்து, இவரது இலக்கணப் புலமையை நன்கு அறியலாம். இங்ஙனம் பெருமையுற்றிருந்த பெண் புலவர் இன்னும் எத்துணையரோ அறியோம்! 'பாணன்' என்பது பாடகன் பெயர். இதற்குப் பெண்பால் 'பாடினி' என்பது. இவர் புலமை நிறைந்திருந்தவர் ஆதலின் உயர்வைக் குறிக்கும் 'ஆர்' விகுதியை இவர் பெயருடன் சேர்த்துப் புலவர் இவரைப் 'பாடினியார்' என்று அழைக்கலாயினர். இவர் காக்கையைப்பற்றிச் சிறப்பித்துப் பாடிய காரணத்தால் 'காக்கை பாடினியார்' என்று அழைக்கப்பட்டனர்போலும்! தமிழ்ப் பெண் உலகத்துக்குப் பெருமை தந்த இவரது திருப்பெயர் வாழ்க!

பொன்முடியார்

இவர் ஒரு பெண் புலவர். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவர் தமது புலமைத் திறத்தால் எந்த அரசனிடமிருந்தோ பொன்முடி ஒன்றைப் பரிசாகப்பெற்ற காரணத்தால், இப்பெயர் பெற்றிருக்கலாம் என்று அறிஞர் கூறுவர். இங்ஙனம் புலவர்கள் அரசரால் முடிசூட்டப் பெறல்

உண்டு என்பதைச் **சேக்கிழார், வில்லிபுத்தூர் ஆழ்வார்** வரலாறு களால் அறியலாம். 'தகடூர் யாத்திரை' என்பது ஒரு பழைய தமிழ் நூல். அஃது இப்போது இல்லை. அந்நூலில் இப் பொன்முடியார் பாடிய சில பாக்கள் இருந்தன என்பது தொல்காப்பிய உரைகொண்டு உணரலாம். இவர் புறநா னூற்றில் மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று இவரது கடமை உணர்ச்சியை நன்கு விளக்குவ தாகும். அச்செய்யுள் எக்காலத்துக்கும் எக்குடும்பத்துக்கும் எச்சமூகத்துக்கும் பொதுவுடைமை ஆகும். அதன் விழுமிய பொருளைக் காண்க:

"மகனைப் பெற்று வெளியே விடல் எனது (**தாயின் கடமை**; அம்மகனைச் சான்றோன் (அறிஞன்) ஆக்குதல் **தந்தையது கடமை**; அம்மகனுக்குப் போர்க்குரிய வேலைத் தயாரித்துத் தருதல் **கொல்லனது கடமை**; அம்மகனுக்கு நல்ல ஒழுக்கம் கற்பித்தல் **அரசனது கடமை**; போரில் திறம் படப் போர் செய்து யானையைக் கொன்று நடத்தல் **அம்மக னது கடமை**."

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே ;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே ;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்ன அரிய கருத்துக்கள் ! தாய்-தந்தை-மகன்-அரசன் - கொல்லன் இவர்தம் கடமைகளை என்ன அருமையாக-சுருக்க மாக-உணர்ச்சியோடு இவ்வம்மையார் கூறியுள்ளார் ! இத் தகைய—தம் கடமை உணர்ந்து நடந்த-தமிழ்ப்பெண்மணிகள் வாழ்ந்த காலமன்றோ '**பொற்காலம்**' என்று கூறத்தக்கது ! இப்புலவர் மெய்யாகவே வீரர் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருத்தல்வேண்டும் என்பது இச்செய்யுளால் விளங்குகிறது அன்றோ ? இவ்வீரப் பெண் புலவரின் திருப்பெயர் வாழ் வதாக !

பூத பாண்டியன் மனைவியார்

இவர் பாண்டிமாதேவியார் ; கணவனைத் தம் உயிர் எனக் கருதியவர் ; கவி பாடும் ஆற்றல் பெற்றவர். இவர் கணவனை பூத பாண்டியன் இறந்ததும், அவனுடன் தீக்குளிக்க முனைந் தார். அப்போது இவரைச் சான்றோர் சிலர் தடுத்தனர். அவ்வமயம் இவ்வரசியார் அவர்களைப் பார்த்து,

"கணவனுடன் நீயும் இறத்தலே தகுதி எனக்கூறல் உங்கள் கடனாகும். சான்றோராகிய நீங்கள் அங்ஙனம்கூறாது என்னைத் தடுத்தல் அறமன்று. பழைய சோற்றை எள்துவையலோடும் வெந்த வேளையிலையோடும் உண்டு, பாயில்லாமல் தரையிற் படுத்துக் கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிரைப் போல யான் இருத்தல் இயலாது. சுடுகாட்டில் அடுக்கப்பட்ட பிணப்படுக்கை உங்கட்கு அரிதாகும்; ஆனால் அஃது எனக்கு அரிதன்று; எனது கொழுநன் இறந்தான்; அவனைக் கொளுத்தும் தீ எனக்குப் பொய்கையைப் போன்றது. இந்நிலையில் எனக்குத் தீயும் நீரும் ஒரே தன்மையுடையன. நான் தீக்குளித்தே தீருவேன். என்னைத் தடைசெய்யற்க"

என்னும் பொருள் கொண்ட செய்யுள் ஒன்றைப் பாடித் தீக்குளித்து மாண்டார். இச்செய்யுள் 'புறநானூறு' என்னும் தமிழ்நூலுள் காணப்படுகிறது. இச் செய்யுளிலிருந்து இவ்வரசியாரின் கற்பு மேம்பாட்டையும் புலமையையும் நன்கு அறியலாம் அல்லவா? இத்தகைய அரசமா தேவியரைப் பெற்றது நமது தமிழ்நாடு!

ஔவையார்

இவர் கடைச்சங்க காலத்தவர். இவர் முடியுடை மூவேந்தராலும் நன்குமதிக்கப்பட்டவர்; 'அதியமான் நெடுமான் அஞ்சி' என்னும் சிற்றரசற்கு உற்ற நண்பர். அவ்வரசன் இவரைத் தமிழ்த் தெய்வமாகப் போற்றி வந்தான்; ஆயுள் நீட்டிக்கும் கருநெல்லிக் கனி ஒன்றைத் தான் உண்டு ஆயுள் நீட்சி பெறாமல், ஔவையாருக்கு ஈந்து மகிழ்ந்தவன். இவ்வொரு நிகழ்ச்சியிலிருந்தே அவன் ஔவையாரை எங்ஙனம் மதித்திருந்தான் என்பது விளங்குமன்றோ?

ஔவையார் சிறந்த புலவர்; கவி பாடும்பேராற்றல் வாய்ந்தவர்; முற்றிய திருவின் மூவராயினும் தம்மை மதிப்பவரையே மதிப்பவர்; ஏனையோரை மதியாதவர்; அஞ்சா நெஞ்சினர். அதியமான் ஒருபோது அவரைவிட்டுப் பிரிய மனம் இல்லாதவனாய்ப் பரிசில் நீட்டித்தான். அம்மையார் கோபங் கொண்டார்; உடனே புறப்பட்டார். அவர் சீற்றத்தை அறிந்த வள்ளல் வெளிப்போந்து உபசாரம் கூறி உள் அழைத்துச்சென்று வேண்டியன அளித்து அனுப்பினான். மதியாதார் வாசலை மிதியாதார் ஔவையார். தனக்கும் கோவலூர் அரசற்கும் சந்து செய்விக்கத் தக்கவர் ஔவையாரென்பதை அறிந்து அதியமான், அவரை அவ்வரசன்பால் தூது அனுப்பினர். அவ்வேந்தனும் அவரை வரவேற்றுத்

தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டிப் பெருமை பேசினன். அவ்வளவில் ஔவையார்,

"ஆ! இவ்வாயுதங்கள் எவ்வளவு அழகாக எண்ணெய் பூசப்பெற்று இருக்கின்றன! எம்மரசன் அதியமானுடைய வேல்களோ முனை மழுங்கிக் கிடக்கின்றன"

என்று கூறினார். இதன் பொருளாவது: 'உன் போர்க் கருவிகள் தொழில் அற்று வீணே கிடக்கின்றன. எம்மரசன் 'ஆயுதங்கள் போரில் பயன்பட்டு முனைகெட்டுக் கிடக்கின்றன; அவை தமக்குரிய வேலையை (பகைவரைக் குத்துதலை)ச்செய்து கொண்டிருக்கின்றன' என்பது.

ஔவையார் என்ன நயமாக ஓர் அரசனை மட்டந் தட்டு கிறார் என்பதைப் பாருங்கள்! என்னே இவரது சொல் திற மை! இவருடைய குணாதிசயங்கள் மேலும் பலவாகும். அவற் றையும் வேறு பல பெண்புலவர் வரலாறுகளையும் சங்க நூல்க ளால் அறிந்து இன்பமடைதல் தமிழ் மக்களின் நீங்காக் கடமை ஆகும்.

மாமண்டூர்ச் சாசனம்

தென்னிந்தியப் பண்டைய வரலாற்றைப்பற்றியும், இந்தியாவில் இக்காலை வழங்கும் மொழிகள் எல்லாவற்றிலும் பழமையதாகிய தமிழ் மொழியைப்பற்றியும் புதிய சான்றுகள், காஞ்சீபுரத்திற்கு ஏழுமைல்களுக்கப்பாலுள்ள மாமண்டூர் என்னுமிடத்தில் கிடைத் துள்ளன என்று இந்திய அரசாங்க புதை பொருளாராய்ச்சிக் கழகத்தார் அறிவிக்கின்றனர்.

அசோகர் கல்வெட்டுக்களிற் கண்ட மொழியை யொட்டியதும் ஆனல்: பாலிமொழியாகவின்றித் தமிழ்மொழியொடு தொடர் புடையதுமாகிய பிராமி மொழியில் நான்கு வரிகளுள்ள கல் வெட்டொன்று அங்கே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. புத்தத் துறவிகளுக்குக் குகையமைத்தமை அதிற்குறிக்கப்பட்டுள்ளது.

புறநானூற்றுச் செய்யுள்

புலவர் சிலரிடம் செல்வம் தங்காமைக்கு ஒரு காரணம்

நின்நயந்து உறைநர்க்கும், நீநயந்து உறைநர்க்கும்,
பன்மாண் கற்பின் நின் கிளைமுத லோர்க்கும்,
கடும்பின் கடும் பசி தீர யாழ நின்
நெடுங் குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்,
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி, மனைகிழ வோயே;
பழம் தூங்கும் முதிரத்துக் கிழவன்
திருந்து வேல் குமணன் நல்கிய வளனே.

—செய், ௧௬௩.

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் பெருமானின் போக்குப், பெருஞ் சித்திரமாகவே இருக்கிறது. ஒரு நேரத்தில், மிகவும் வறியவராய் இருக்கிறார். இன்னொரு நேரத்தில், பெரிய தொகை ஒன்று கையில் வைத்திருக்கிறார். மறு நேரத்தில், அவரிடம் ஒன்றுமே இல்லை. செல்வமும் வறுமையும் ஆறு இடும் மேடும் மடுவும்போல் ஆகும் என்னும் உண்மை அவரிடத்தில் விளக்கமாயிருக்கிறது.

அவர், தமது வறுமையைப்பற்றிச் சொல்லுங் காலங்களில் கன்னெஞ்சமும் நீராய்க் கரையும்.

'வீட்டில் உணவே இராதாம். தாயின் முலைப்பால் வற்றிக் கிடத்தலால், தன் புதல்வன் பாலுண்பதற்கும் வழியில்லையாம்.

குறிப்புரை :

௧. நயந்து-விரும்பி; 'நின் நயந்து உறைநர்' என்று குறிக்கப்பட்டவர்கள் அந்த அம்மையாரின் அறிவு ஆற்றல்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள். 'நீ நயந்து உறைநர்' எனப்பட்டவர்கள் அந்த அம்மையாரினும் உயர்ந்தவர்கள்.

௨. மாண்-மாட்சிமையான. கற்பு-ஒழுக்கம்.

௩. கடும்பு-சுற்றம். 'யாழ' என்பதற்குப் பொருளில்லை; அசை.

௬-௭. நீயும் கொடு என்றமையால், நானுங் கொடுப்பேன் என்னுங் கருத்துப் பெறப்பட்டது. 'கொடுமதி' என்பதில் 'மதி' என்பதற்குப் பொருளில்லை; அசை. மனைகிழவோய்-மனைக்கு உரிமையுடையோய்; மனைவி என்பதற்கு வந்தது.

௮. தூங்கும்-தொங்கும். கிழவன்-உரியவன்.

௯. நல்கிய-நல்லெண்ணத்துடன் கொடுத்த; வளன்-இங்கே 'மிக்க பொருள்' என்பது குறித்து நின்றது.

அந்தக் குழந்தை சிறிது நேரம் மூலைக்காம்பை ஊச்சி ஊச்சிப் பார்த்துவிட்டுப், பசி மிகுதியால் அடுப்பறையுள் நுழைந்து அங்கே வைத்திருக்கும் பாண்டங்களை ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்து, அவைகளில் எதுவும் இல்லாமையால் ஏமாற்ற முற்று அழுமாம். இரவிலும் இதே நிலைதான். அழுகையை மாற்றுவதற்காகத் தாய், 'புலி' 'புலி' என்று அச்சங் காட்டுவாளாம்; ஒருகால் 'நிலா' 'நிலா' என்று மகிழ்ச்சி ஊட்டுவாளாம்; எதனாலும் அழுகை தீராமையின் அவள் மிகவும் நொந்து, 'ஐயோ, நினது வாடிய நிலையை நின் அப்பாவுக்குத்தான் காட்டு' என்று சொல்லி மனங் கரைவாளாம்'. (புறம், கசுO)

இப்படிப்பட்ட கொடிய வறுமையாளராகத்தான் இவர் இருக்கிறார். இருந்தாலும், இவருக்குச் செல்வம் இல்லை என்று சொல்லுவதற்கில்லை. சில நேரங்களிற் பேரளவான செல்வமும் இவருக்குக் கிடைக்கிறது. அப்போது அவர், ஒரு பரம்பரையான பெருஞ்செல்வர் போலவும், பெரிய வள்ளல் போலவும் தோன்றுகிறார். உடனே அது செலவழிந்து போகிறது.

ஒரு நாள் **குமணன்** என்னும் நற்குணமுள்ள வள்ளல், இவர் இல்லத்தின் வறுமைத்துன்பம் தெரிந்து, இவருக்கு ஒரு பெருந்தொகையான பொருளை அன்புடன் வழங்கினான். புலவர் அதனை வீட்டுக்குக் கொண்டு வந்தார். வந்தவர், தம் அன்பின் மனைவியாரை அழைத்து அதனை அவருக்குக் காட்டிப், பின் வருமாறு சொல்லுகிறார்:

"உன்னை நேசித்து உன் சார்பாயிருக்கும் மாதர்களுக்கும், நீ நேசித்து நீ சேர்ந்திருக்கும் மாதர்களுக்கும், பல மாட்சிமையான ஒழுக்கங்களையுடைய உன் உறவினர்கட்கு முதல்வர்களாய் ஆண்டு மூத்திருப்பவர்களுக்கும், நம்மைச் சார்ந்து இங்கே இருக்கும் நம் சுற்றங்களின் பெரும்பசி நீங்குவதற்காக முன்னே நீ அளவுகுறித்து வாங்கினமையால் நெடுங்காலமாகத் திருப்பித்தருவாய் என்று எதிர்பார்த்திருக்கும் நின் கடன்பொருளை அந்த நேரத்தில் உதவி செய்தவர்களுக்கும், இன்னும், இன்னாருக்குத்தான் தரவேண்டும் என்று எண்ணாமலும், என்னோடு கருதாமலும், இனி வல்லமையாய் வாழ்க்கை நடத்துவோம் என்று சிக்கனத்தையே நினையாமலும் நீயும் இந்தப் பெருஞ்செல்வத்தை எல்லாருக்கும் வழங்கு; நானும் என்னைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் வழங்குவேன். மனைவீ! பழங்கள்

தொங்கும் முதிரமலைக்கு உரியவனை, திருந்திய படைகளை ஏந்துங் குமணவள்ளல் நமக்கு நல்லெண்ணத்துடன் அளித்த பெருந்தொகை இது."

எப்படியிருக்கிறது இந்தக் குடும்பத்தவர்களின் சிக்கனமும் வாழ்க்கையும்! இவர்களின் செல்வம் எப்படி நிலைக்கும்?

பெருஞ்சித்திரனார் அந்த வறுமையிலும் தம் மனைவியாரிடம் இப்படிப் பேச இடமிருந்ததென்றால், தம் கணவனார் உள்ளத்தோடு மாறுபடாமல் இசைந்திருந்து இல்லறம் நடத்தும் நற்குணத்தில் அந்த அம்மையார் எவ்வளவு மேம்பட்டவர்களாயிருக்கவேண்டும்! மேலும், பெருஞ் சித்திரனார் இந்தப் பேச்சை இங்ஙனம் உரைநடையிற் பேசினதாகத் தெரியவில்லை. தலைப்பிற் காட்டியிருக்கும் பாட்டு வடிவமாகவே பேசியிருக்கிறார். அந்த அம்மையாரும் அதனை அறிந்து கொள்ளத்தக்க பெரும்புலமை வாய்ந்தவராகவே இருந்திருக்க வேண்டும். இருவரும் கல்விச் செல்வர்கள்.

இனி, இவர்களைப் பொருட்செல்வம் இல்லாதவர்கள் என்று சொல்லத்தான் இடமிருக்கிறதா?

செல்வத்தைப் பாதுகாப்பது இவர்கள் கருத்தாயில்லை. அதனைத் தக்கவாறு பயன்படுத்துவதே இவர்கள் கருத்தாயிருக்கிறது. தமக்குப் பொருள் கிடைக்கும்போது, தம்மைப் போலத்தானே மற்றவர்கட்கும் துன்பம் உண்டு என்று இவர்கள் உள்ளம் நினைக்கிறது. அதனால் தாமே அதனைப் பயன்படுத்திக்கொள்ள இவர்களுக்கு மனம் வரவில்லை. இதுவன்றோ, நாகரிகம் என்பது! செல்வத்தை வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருப்பவர்கள் செல்வர்கள் அல்லர்; அதனைத் தக்கபடி பயன்படுத்தி வாழ்பவர்களே உண்மைச் செல்வர்கள்.

பெருஞ்சித்திரனார், நல்லுணர்ச்சிகளுக்கு ஒரு களஞ்சியம்.

புலவர்களின் உயர்ந்த உள்ளப்போக்குகளே அவர்கள் சில நேரங்களிற் பொருளில்லாம லிருப்பதற்குக் காரணம் என்பது இந்தப் பாட்டிலிருந்து நன்றாய் விளங்குகின்றது.

குறிப்பு:—கழகத்திலிருந்து விரைவில் வெளிவரவிருக்கும் 'சங்க நூல் இன்கவித் திரட்டு' என்னும் நூலிலிருந்து எடுத்து வெளியிடப்படுகிறது. விளக்கம் இளவழகனார் எழுதுவது. எல்லாரும் சங்க நூல்களைப் படிப்பதற்கு, ஒரு சுவையை உண்டுபண்ண வேண்டுமென்பது நோக்கம்.

"இலனென்னு மெவ்வ முரையாமை ஈதல்."

[பண்டிதர் திரு. கா. போ. இரத்தினம் அவர்கள், யாழ்ப்பாணம்]

"இலனென்னு மெவ்வ முரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள"

எனுந் திருக்குறளுக்குப் பரிமேலழகர், 'யான் வறியனென்று இரப்பான் சொல்லுமிளிவரவைத் தான் பிறர்கட்சொல்லாமையும்; அதனைத் தன்கட் சொன்னார்க்கு மாற்றுதீதலும்; இவையிரண்டு முளவாவன குடிப்பிறந்தான்கண்ணே எனக்கருத்துரைத்துப் பின் இலனென்னு மெவ்வ முரையாமை ஈதல் என்பதற்கு (1) அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தல் எனவும்,
(2) அதனைப் பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவனுரையாவகையாற் கொடுத்தலெனவும்,
(3) இது பொழுது பொருளுடையே னல்லேனெனக் கரப்பார் சொல்லும் இளிவரவைச் சொல்லாது கொடுத்த லெனவும் உரைப்பாருமுளர்" எனக் கூறியுள்ளர்.

திருமுருகாற்றுப்படையில் முருகக்கடவுள் கொடுக்குங் கொடையைப்பற்றி நக்கீரர் சிறப்பாய் எடுத்துரைத்திருக்கிறார். முருகக்கடவுளுடைய கொடையில் மேற்கூறிய மூன்று தன்மைகளுமமைந்திருப்ப தறிந்தின்புறற் குரியது. இஃது குறளின் உண்மைக் கருத்தையும் புலப்படுத்துகிறது.

இரவலனைக் கண்ட முருகக்கடவுள் 'இரவலனே! உன் வரவை நானறிவேன். நீ இரந்துவந்த பொருள் கிடைக்குமோவென்று பயப்படாதே!' என்று பல அன்புடைமொழிகள் கூறி முத்தி கொடுப்பார். அம்முத்தியைப் பெற்றவன் பிறருக்கே முத்தியைக் கொடுக்கத்தக்கவனாயின் அம்முத்தியின் பெருமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

"அஞ்சல் ஓம்புமதி அறிவனின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்று
இருணிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ யாகித்தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி..........

முருகக்கடவுள் இதுபொழுது பொருளுடையே னல்லேனெனக் கரப்பார் சொல்லும் இளிவரவைச் சொல்லாது, இலனெனும் இளிவரவை இரவலன் தனக்குச் சொல்வதற்கு முன்னே தான் குறிப்பறிந்து 'அறிவனின் வரவு அஞ்சல் ஓம்புமதி' எனக் கூறிப் பிறனொருவனிடத்துச் சென்று அவ்விரவலன் இலனென உரையாது, அவனே பிறருக்கு முத்தி கொடுக்கத்தக்க முறையில் முத்தி கொடுப்பாரென்க.

மான வருங்கலம்-I

[வித்துவான் பெ. கோவிந்தன்]

தாமரை மலர்ந்த காமர் பொய்கைத்
தீநீர் படிந்து செங்கழை குதட்டிக்
கயவா யுருத்துங் கதிர்மணி கான்று
துயில்வரா வெழுப்பத் துள்ளி அயல்வளர்
கூழை வாழைக் கொழுங்கனி கிழித்துத்
தேறல் வடித்துத் திரும்பி மூழ்கி
ஊறு பெருமடி யுகைக்கக் கன்றெனப்
பெயரா தெருமை யயராது சொரியும்
நறுஞ்சுவைத் தீம்பால் நறவொடு பெருகி
உறுமத கிடைவழிந் தோடிச் செறுவிடைக்
கரும்பு செந்நெல் கமுகு வளர்க்கும்
மருத வேலி வான்றோடு மாளிகைக்
கொல்கணை தொடுத்த வில்வரை கொடியொடு
புல்லு வெண்பிறை பல்சுவை நச்சி
விண்ணிலம் விடுத்து மண்ணிழி தெய்வப்
பெண்ணெனப் பிறங்கும் பேரெழிற் றலைநகர்
கருவூர்; திருவூர்; கலையூர்க் காவலன்;
எழுநனி நாணும் மிணைதிர டோளினன்;
கருமுகில் நாணும் தருநெடுங் கையினன்;
விரிதிரைப் பரவை வெள்கும் கலையினன்;
ஐயமில் கேள்விப் பொய்கை யார்பால்
மெய்ந்நூல் கற்ற விழுமியன்; ஆய்ந்த
புலவர் பாடும் புகழினன்; புரிகுழல்
அரிவையர் விரும்பும் அழகினன்; அருளும்
எளிமையும் கொண்ட யிறைவன்; சேரர்
வழியிற் றோன்றிய மன்னன்; **மான**
அருங்கலம் புனைந்த அகத்தினன்; **கணைக்கால்**
இரும்பொறை யென்றுல கியம்பும் பெயரினன்;
கொன்னுனி வேற்கைக் கோதை மார்பன்
முன்னவன்; அரிமா அன்னவன் ; கொற்ற
வெண்குடை நிழற்ற விற்கொடி விளங்க
நுண்ணறி வமைச்சர் நூனெறி காட்டத்
திண்படை மறவர் சேரிடர் களையக்
கண்ணிமை யென்னக் காதலி தன்னொடு
அசும்புகொள் பசும்பொற் றவிசிடை யமர்ந்து
விசும்பு தொடுமுடி வெற்பும் வேழமும்

பிடியெனக் கன்றென வடிவிற் றிகழுஞ்
சேர நாட்டைச் செம்மையிற் காத்தனன்
வானமும் மாரி திங்கள் வழங்கும்;
நானிலம் கூலமும் நறுஞ்சுவைக் கனியும்
தேனும் கறியும் செங்கட் கரும்பும்
காயும் பிறவும் ஒய்வர நல்கும்
வளமெலாங் கொண்டு வானவ ரென்போர்
அளவையா லெடுத்தெடுத் தாண்மையிற் காத்த
காவலர்க் கீவார்; பாவலர்க் கீவார்;
ஏவலர்க் கீவார்; இல்லார்க் கீவார்;
வாளும் ஏரும் வழங்கினார்க் கீவார்;
நாளும் கோளும் நவின்றார்க் கீவார்;
உடையும் அணியும் உதவினார்க் கீவார்;
குடமும் குழிசியும் கொடுத்தார்க் கீவார்;
பிறகொடுத் தார்க்கும் பெட்பி னல்கிக்
குறுகுவா ருருவங் கொண்டுட் காட்டும்
மறுகார் பளிக்கு மாளிகை யிடையிருந்
தறம்பல வியற்றி அரும்பயன் கொள்வார்.
ஆனே றனையார் மானேர் நோக்கியர்
தேனேர் கிளவி செவிமடுத் துவப்பார்;
தும்மின் வாழ்த்தி, யாருளத் தும்மினை;
அம்மின் வருந்துவள் அகலென அழுங்குவர்;
காரகில் புகைத்துக் கருங்குழல் புலர்த்துவர்;
தாரும் அணியும் தலைமிசைச் சூட்டுவர்;
வாளிரு நெடுங்கண் மைகொண் டெழுதுவர்;
தோளிணை திகழத் தொய்யி லெழுதுவர்;
சீரடி சேப்பச் செம்பஞ் சூட்டுவர்;
பொன்னு மணியும் புனைவோர் பலரால்;
மின்னென மறுகில் விளங்குவோர் பலரால்;
குழலிசை வெறுத்துக் குறுநடைச் சிறாஅர்
மழலை கேட்டு மகிழ்வார் பலரால்;
பாலமு தொடுதமிழ்ப் பண்ணமு தூட்டி
வாலிழை யரிவையர் மகாஅரை வளர்ப்பர்;
நன்மல ரெடுத்து நங்கையர் நாரொடு
மென்னறுந் தொடையல் வீக்குதல் போலச்
சொன்மொழித் தொடையல் தொடுப்போர் பலரால்
பொன்னுல கென்பதும் புத்தமு தென்பதும்
தென்வள நாட்டிற் செல்வமு முணவும்
பெற்றின் புறுமூழ் பெருர்மொழி யென்று

நற்றமிழ் தேர்ந்து நகுவார் பலரால்;
வல்லா ரடைந்து வயின்றொறும் வயின்றொறும்
வில்வாள் பயின்று வீரரா வார்பலர்;
வைகறை யெழுந்து வாவி படிந்து
பொய்ம்மை கடிந்து பொருவேல் முருகையும்
மைம்மிடற் றிறையையும் வணங்குவோர் பலரால்
கொடுவில் லல்லது தொடுவில் லறியார்
அடுபுகை யல்லது சுடுபுகை யறியார்
உண்ணீ ரல்லது கண்ணீ ரறியார்
துன்பொன் றின்றித் தோன்றிய நாண்முதல்
இன்பந் துய்த்திங் கெண்ணி லறஞ்செய்
மக்களே யுலகம் வானவ ரென்றல்
தக்க தொன்றன்று; தவறுபா டுடையது.
வாழ்க சேர வளமலி நாடு;
வாழ்க கணைக்கா லிரும்பொறை மன்னன்;
வாழ்க அவன்முடி வாழ்க அவன்கோல்;
வாழ்க தமிழென வாழ்த்திவாழ் வாரே.

மக்களினம் போரினால் அழிந்தொழியாமல் இருந்துவருமானால் இன்னும் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின் எவ்வாறிருக்கும்? இக்கேள்விக்கு, வளர்ச்சிமுறைக் கொள்கையைப் பல சான்றுகள்கொண்டு ஆராய்ந்து வரும் அறிவியலறிஞர்கள் ஒரு விடை கண்டுபிடித்துள்ளார்கள். மக்களின் உடலுறுப்புக்கள் வரவரச் சிறுத்து மூளை பெருத்து வடிவிற் பெரும் பகுதி மூளையாகவே அமையக்கூடும் என்றும், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐம்புல அறிவுகளும் வரவரக் குறைந்துவரும் என்றும், ஆனால் அறிவாற்றலோ பன்மடங்கு பெருகிவரும் என்றும் டாக்டர் பிரான்ஸ் வீடன்ரீஷ் என்பவர் கூறியுள்ளார்.

மரக்குதிரை, என்னும் 'சைக்கிள்'

[திரு. N. K. வேலன் அவர்கள் B. A.]

சைக்கிள் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டபொழுது, மரத்தினால் செய்யப்பட்டிருந்தது. அக்காலத்தில் அதற்கு 'மரக்குதிரை' என்னும் பெயர் வழங்கிவந்தது.

1818-ம் ஆண்டில், பிரெஞ்சுக்காரர் ஒருவர், மரக்குதிரை (wooden-horse) என்னும் சைக்கிளை முதன்முதலாகக் கண்டு பிடித்தார் இது மரத்தாலேயே செய்யப்பட்டிருந்தது. இதில், இரண்டு சக்கரங்கள் ஒரு சட்டத்தில் இணைக்கப்பட்டு, அதன் மேல் ஓர் ஆள் உட்காருவதற்கு இடம் அமைக்கப்பட்டிருந்தது. இரண்டு கால்களையும் தரையில் உதைப்பதாலேயே இவ்வண்டி நகர்ந்து சென்றது. மக்கள் அந்நாளில் இவ்வண்டியைக்கண்டு ஏளனம் செய்யத்தொடங்கினர். செய்தித்தாள்களில் இதைக் குறித்துப் பல வேடிக்கையான படங்கள் வெளிக்கிளம்பின. இவ்வண்டியை வெளியில் எடுத்துச் செல்வதே நகைப்பிற்கிடமாயிருந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்னர், பெடலின் (pedal) உதவியால் இவ்வண்டியின் முன் சக்கரம் சுழலும்படி செய்யப்பட்டது. சக்கரங்கள் மரத்தினால் செய்யப்பட்டு, அவற்றிற்கு இரும்புப் பட்டைகள் போடப்பட்டிருந்தன.

1879-ம் ஆண்டில்தான், முதன்முதலாக நாம் இந்நாளில் காணும் சைக்கிள் கண்டு பிடிக்கப்பட்டது. இவ்வண்டியிலும் பல கெடுதல்கள் இருந்தன. முன் சக்கரம் பின் சக்கரத்தை விட மிகப் பெரிதாயிருந்தது. முன் சக்கரம் கல்லின்மீது மோதும்படி நேரிட்டாலும், அல்லது பாதையில் வேறு எத்தகைய தடை ஏற்பட்டாலும், அதில் ஏறிச்செல்பவன் குப்புறக் கீழேவிழ நேரிட்டது. லாசன் (Lawson) என்னும் பேரறிஞர் 1885 ம் ஆண்டில் மிகச்சிறந்த முறையில் சைக்கிளைச் செய்து முடித்தார். இரண்டு சக்கரங்களுக்கும் இடையில் உள்ள அச்சாணியால் இவ்வண்டியின் பெடல்கள் (Pedals) சுழன்றன. இவற்றோடு இணைக்கப்பட்டிருந்த சங்கிலி பின் சக்கரத்தைச் சுழலும்படி செய்தது. இரண்டு சக்கரங்களும் ஒரே அளவாக இருந்ததால், அதில் ஏறிச்செல்பவர் கீழேவிழாமலிருக்க ஏதுவாயிற்று. நாளடைவில், சக்கரங்களில் இருந்த இரும்புப் பட்டைகள்போய்க் கெட்டியான ரப்பரால் (rubber) ஆகிய டயர்கள் (tyres) தோன்றின. இதற்குப் பின்னரே, காற்று அடைக்கும் டயர்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சைக்கிள் இப்பொழுது உலகமெங்கணும் பரவி இருக்கிறது. மோட்டார் (motor) முதன் முதலாகத் தோன்றியவுடன், சைக்கிள், உலகிலேயே இல்லாது மறைந்து விடுமோவெனப் பலர் அஞ்சினர். ஆயினும், நாளுக்குநாள் சைக்கிள்களின் எண்ணிக்கை மிகுதிப்பட்டுவந்தது. இக்காலத்திலோவெனில், நாட்டுப்புறங்களில்கூட சைக்கிள்கள் நிறைந்து கிடக்கின்றன. 'மரக்குதிரை'யாகத் தோன்றிய சைக்கிள் 'இரும்புக்குதிரை' யாக மாறிவிட்டது. ஆங்கில நாட்டில் 'பர்மிங்ஹாம்' (Birmingham) தொழிற்சாலையில் மட்டும் இப்பொழுது நாள் ஒன்றுக்குச் சுமார் 500 முதல் 1000 சைக்கிள்கள் வரை உற்பத்தி செய்யப்படுகின்றன. சைக்கிள்களின் பல்வேறு பாகங்களும் பொறிகளின் உதவியால் வெட்டப்பட்டு, ஒன்றோடொன்று நன்றாகப் பொருந்தும்படி இணைக்கப்படுகின்றன. சக்கரங்களில் துளைகள் போட்டுக் கம்பிகளை மாட்டும் வேலை ஒரு பொறியினாலேயே செய்யப்படுகின்றது. சைக்கிள்களுக்குச் சாயம் பூசுவதும் ஒரு பொறியினாலேயேதான் நடைபெறுகின்றது. சைக்கிளின் ஒவ்வொரு பகுதியும் சாயத்தில் நன்கு நனைக்கப் பட்டுப் பின்னர், கடுமையாகச் காய்ச்சப்படுகின்றது. இங்ஙனம் மூன்று அல்லது நான்கு முறை காய்ச்சுவதால்தான் நல்ல பளபளப்பு ஏற்படுகின்றது. இன்னும் சில பகுதிகளுக்கு மின்சாரத்தின் உதவியால் 'நிக்கல்' (nickel) பூசப்படுகிறது. இது, பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருப்பதுடன், சைக்கிளைத் துருப்பிடிக்காமலும் பாதுகாக்கின்றது.

சைக்கிள் தன்னைப்போன்று ஏழுமடங்கு எடையுள்ள சுமையை எளிதாகச் சுமக்கவல்லது. இதில் ஏனைய வண்டிகளைப்போல் மிகுந்த செலவு ஏற்படுவதில்லை. இதன் உதவியால் நினைத்தவுடன் நாம் குறிப்பிட்ட இடங்களுக்கு மிகவும் விரைவாகப் போய்ச்சேர முடிகிறது. உடற் பயிற்சியின் பொருட்டு சைக்கிளில் ஏறிச் செல்பவர்களும் உண்டு. சைக்கிளில் ஏறிக்கொண்டு பலர் வியக்கத்தக்க பல செயல்களைச் காட்டுகின்றனர். (Edward Hale) 'எட்வார்டு ஹேல்' என்பவர் நாள் ஒன்றுக்கு 100 மைல் வீதம் ஒருவருடம் வரை சைக்கிளில் ஏறிச்சென்றதாகக் கூறப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டுப் புலவர்

[வித்வான் மா. இராசமாணிக்கம், B. O L.]

ஆங்கிலத்தில் ஒவ்வொரு நூற்றாண்டுப் புலவர் வரலாறுகளும் தொகுத்து எழுதப்பட்டுள்ளன. அவர்கள் பாடல்கள், உரைநடை, நாடகம், புதுமை நூல்கள் இன்னபிறவும் அத்தொகுப்பு நூல்களுள் வெளியிடப்படுகின்றன. இம்முறையால் ஆங்கிலமொழி வளர்பிறை போல வளர்ச்சி பெற்றுவருகிறது. ஆங்கிலேயர், ‘இங்கிலாந்து வேண்டுமா? ஷேக்ஸ்பியர் வேண்டுமா?—ஒன்றைக் கூறுக’ எனின், ‘ஷேக்ஸ்பியரே வேண்டும்’ எனக் கூறுவர்’ என்பதிலிருந்து அவர்தம் மொழிப் பற்றையும் அம்மொழியைப் பாதுகாத்து வளர்க்கும் திறனையும் நாம் நன்கறியலாம். மனித வளர்ச்சிக்கு—சமூக வளர்ச்சிக்கு இத்தகைய சான்றோர் வாழ்க்கைச் செய்திகளும் அவர்தம் எண்ணங்களாம் பனுவல்களுமே வேண்டற்பாலன. இக்கருத்தை—சமூக வளர்ச்சிக்கு உரிய அடிப்படையை நன்குணர்ந்தவர் ஆங்கிலேயர். இதனை இன்றும் அறியாதவர் தமிழர். இதனாற்றான் தமிழும் தமிழ்நாடும் தமிழ்ச் சமூகமும் இழிநிலையில் இருக்கின்றன.

காலஞ்சென்ற திரு. S. சோமசுந்தர தேசிகர் மேற்கூறப் பெற்ற ஆங்கிலமுறையைப் பின்பற்றி 16, 17-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் வரலாறுகளும் பிறவும் தொகுத்து இரண்டு நூல்கள் வெளியிட்டுள்ளது பொன்னே போலப் போற்றத் தக்கது. அவரைப் பின்பற்றி 18, 19, 20-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் வரலாறுகளும் வெளிவரல் அவசியம் ஆகும். 18, 19-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் வரலாறுகள் ஒருவாறு பல நூல்களைக்கொண்டு தொகுக்கக்கூடும். ஆதலால் அது சிறிது தாமதத்தோடு தொகுப்பினும் தொகுக்கலாம். ஆனால் ‘20-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள்’ என்னும் நூல் விரைவில் தொகுக்கப்படல் வேண்டும். புலவருள் பலர் இன்று வாழ்ந்து வருகின்றார்கள். ஆதலால் அவர்களுடைய வரலாறுகள் அவர்களைக் கேட்டுச் சேர்க்கும் குறிப்புகளைக்கொண்டு உடனே திரட்டப்படல் இன்றியமையாததாகும். ஒருவர் தமது வாழ்க்கைவரலாற்றைத் தாமே வரைதல் மிகச்சிறந்தது. இன்றேல் குறிப்புகளேனும் தரல் அவசியமாகும். அவர் காலமான பிறகு அவரது வாழ்க்கை வரலாறு அத்துணைச் சிறந்த முறையில் அமையாது. இவ்வுண்மையை பாஸ்வெல் எழுதிய ‘ஜான்ஸன்’ வரலாற்றைப் படித்தவர் நன்கறிதல் கூடும்.

இருபதாம் நூற்றாண்டு தமிழ் உரைநடை வளர்ச்சிக்குரிய காலம்; ஆராய்ச்சிக்குரிய காலம்; மொழி பெயர்ப்புக்குரிய காலம்; புதுவன புனையும் காலம்; ஒவ்வொரு துறையிலும் சிலர் புகழ்பெற்றவராக இருக்கின்றனர். சிலர் இரண்டு மூன்று துறைகளில் சிறப்பெய்தியுள்ளனர். ஆதலின் அவ்வத் துறையில் அவரவர் சிறப்புகளைக் கிளத்தலே நன்று. இம் முறையை நூல் தொகுத்தெழுதுவோர் கவனித்தல் வேண்டும். காட்டாக ஈண்டுச் சில பெருமக்களைப்பற்றிய சில விவரங்களைத் தருதும்:

டாக்டர் சாமிநாதையர் அவர்கள்

இவர்களது வாழ்க்கைச் சுருக்கம், இவர்களது தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் திறன், இவர்கள் உரைநடை, இவர்களது சொல்லாற்றல், உரையாடல், கவிபாடும் வன்மை, குணாதிசயங்கள், வித்வான் தேர்வை ஏற்படுத்த முயன்றமை முதலியன இவர்களைப்பற்றிய பகுதியில் இடம்பெறல் வேண்டும். தமிழகத்தில் சாதிப்பூசல், அரசியற் பூசல், மொழிப்பூசல் இன்னபிற பூசல்கள் தோன்றிச் சாதாரண மக்களையும் தமிழ்ப் புலவர்களையும் அலைக்கழித்த போதெல்லாம் ஐயரவர்கள் அமைதியோடு இலக்கிய உலகில் தமிழ்ச்சேவை தளராது செய்துவந்தமை பொன் எழுத்துக்களில் பொறிக்கத் தக்கது. இளைஞர்க்கு இஃதோர் இனிய படிப்பினை.

பண்டிதமணி அவர்கள்

இவர்களது வரலாறு, வடமொழி—தென்மொழிப் புலமை, மொழிபெயர்ப்பு வன்மை, கவிபாடும் ஆற்றல், சொற்பொழிவின் இனிமை, நவரசங்களோடு கூடிய உரையாடல், தமிழ் இலக்கியங்களைப் போதிக்கும் முறைமை, சைவசமயத் தொண்டு, தமிழ்ப் பேராசிரியராக இருந்து சென்னை—அண்ணாமலை—திருவாங்கூர்ப் பல்கலைக் கழகங்களில் தலைமை பூண்டு தமிழ்மொழிக்கு ஆற்றிவரும் அருந்தொண்டு முதலிய சிறப்பியல்புகள் இவர்களைப் பற்றிய பகுதியில் இடம்பெறல் இன்றியமையாதது.

பண்டித ந. மு. வே. நாட்டார் அவர்கள்

இவர்களது வரலாறு, இவர்களது போதனா முறை, இவர்கள் எழுதியுள்ள ஆராய்ச்சி நூல்களின் அமைதி, சைவசமயத் தொண்டு, தூய செந்தமிழிற் பேசும் ஆற்றல், இன்ன பிறவும் இவர்களைப்பற்றிய பிரிவில் இடம்பெறல் வேண்டும், பாண்டித்

துரை அவர்கள் ஏற்படுத்திய நான்காம் தமிழ்ச்சங்கத்தில் தங்கத்தோடாப் பரிசுபெற்ற **முதற் புலவராய** இப்பெரியார் வரலாறு—பல நூல்களைக் காகிதத்தில் எழுதிப் படித்துத் தேர்ச்சி பெற்ற இவரது ஆற்றல்—முதலியன சிறப்பெழுத்துக்களில் குறிப்பிடப்பட வேண்டுவன ஆகும்.

திரு. வி. க. முதலியார் அவர்கள்

இப்பெரியாரது வரலாறு, இனிய எளிய தமிழ் நடை, இயற்றிய நூல்கள், செய்த சொற்பொழிவுகள், சமயத்துக்கும் சமூகத்துக்கும் ஆற்றிவருந் தொண்டு, பதிப்பித்துள்ள நூல்கள், பரந்த நோக்கம் இன்ன பிறவும் இடம் பெறல் வேண்டும். இனிய-எளிய தமிழ் நடைக்குப் பெயர் பெற்ற பெரியார் திரு. முதலியார் எனல் மிகையாகாது.

திரு. மறைமலை அடிகள்

மும்மொழிப் புலவரும் சமயப் பெரும் புலவரும் ஆகிய இப்பேரறிஞரைப் பற்றிய வரலாறு, சொல்வன்மை, தனித் தமிழ்உரை நடை நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், பத்திரிகைத் தொண்டு, சமயத் தொண்டு, இன்ன பிறவும் பொன்னே போலப் போற்றத் தக்கவை. **தனித்தமிழ் நடையைத்** தமிழகத்தே புகுத்திய பெருமை அடிகளார்க்கே உரியதெனல் மிகையாமோ?

திரு. சோமசுந்தர பாரதியார்

இப்பெரியாரது வரலாறு, தமிழ்ப்பற்று, தமிழ்ப்புலமை, தொல்காப்பியப் பயிற்சி, புத்துரை கூறுந்திட்பம், பாஇயற்றும் பான்மை, அஞ்சாமற் பேசும் ஆற்றல், உண்மையை உரைக்கும் உளப்பாங்கு, ஆராய்ச்சி அறிவு, புதுமை காண அவாவும் நோக்கம் இன்னபிற இவர்களது பகுதியில் இடம் பெறல் வேண்டும். "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் இவரது உள்ளத்து வன்மை எஞ்ஞான்றும் இறைஞ்சிப் போற்றற் குரியது.

இங்ஙனமே பிற தமிழ்ப் பெரும் புலவர்களாக வுள்ள திரு. மு. இராகவையங்கார், ரா. இராகவையங்கார், திருநாராயணையங்கார், உமாமஹேஸ்வரம் பிள்ளை, ரா. வேங்கடாசலம் பிள்ளை, கா. சுப்பிரமணிய பிள்ளை, சி. கே. சுப்பிரமணிய முதலியார், எஸ். வையாபுரி பிள்ளை, ரா. பி. சேதுப் பிள்ளை, வே. வேங்கடராஜுலு ரெட்டியார், தமிழ்க்கடலில் பல்கலை விளக்காக நிற்கும் டி. பி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை போன்றார்

தம் அரிய வரலாறுகள் அழகிய-உரிய முறையில் எழுதப்படல் வேண்டும். உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கித் தமிழ் இளைஞரை மெய்த் தமிழராக்கும் இப்பெருமக்கள் வரலாறுகள் விரைவில் எழுதப்படல் வேண்டும்.

இக்கருத்தை நிறைவேற்றச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் விரும்பியுள்ளனர் என்பதைத் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் வாயிலாக அறிந்து பெரிதும் மகிழ்கின்றோம். இவ் 'இருபதாம் நூற்றாண்டுப் புலவர்' என்னும் ஆராய்ச்சி மிக்க அருந்தமிழ் நூல் வெளிவரல் 'தமிழ் வளர்ச்சி' என்னும் வண்டிக்கு 'அச்சாணி' ஆகும் என்பது எமது கருத்து. இந்நூல் விரைவில் வெளிவரத் தமிழன்னை துணைபுரிவாளாக!

வங்காளத்திலுள்ள நிபதை என்னும் ஊரில் வசிக்கும் இந்துப் பெண்களெல்லாம் ஒவ்வொரு சித்திரைத் திங்களிலும் முதல் நான்கு நாட்களில் எத்தகைய சாதி வேறுபாடு மில்லாமல் ஒன்றுகூடி ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அரிசி பருப்பு முதலிய உணவுப் பொருள்களைக் கேட்டு வாங்கிச் சேர்த்து ஊருக்கு வெளியிலுள்ள ஆலமரத்தின் அடியிற் சென்று பொங்கலிட்டுப் படைத்து உண்டுமகிழ்வார்கள். அந்த நான்கு நாட்கள் முடிந்தவுடன் அவரவர்கள் தத்தம் வீடுதிரும்பி எப்பொழும்போல நீவேறு நான்வேறு என்று சாதிப்பிரிவினை பாராட்டத்தொடங்கி விடுவார்கள்.

இந்தியாவிலேயே இத்தகைய பண்டைச்சடங்கு ஒன்று இவ்வூரில் தான் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

எழுதொணா ஓவியம்

[" கோவைவாணன் "]

தொன்று தொட்டுச் சித்திரக்கலையில் சிறப்புவாய்ந்திலங்கிய நாடு தமிழ்நாடே யென்பது கலைவல்லுநரின் சந்தேகமற்ற முடிபு. கல், மண் முதலியவற்றின் உதவிகொண்டும், எழுதுகோல், பன்னிறப் பூச்சுக்கள் முதலியவற்றின் உதவிகொண்டும் அழகிய உருவங்களைத் தீட்டும் சித்திரக்கலைஞரிலும் பார்க்க, சொற்சீரும் பொருட்சீரும் சிறந்து விளங்கும் பாக்களால் இணக்கிய உருவங்களை எங்கள் மனக்கண்முன்னே சிந்திக்கும்படி வைத்துப் போந்த பாவலரே இறவாப் புகழுடைந்தார். திரையிலெழுதப்படும் சித்திரங்கள் ஒரோவொரு முறையில் ஒரோவொரு உளப்பாட்டையே காண்பித்து நிற்கும். இவற்றின் சுவைகளும் ஒவ்வொன்றிற்கு மேற்படா. எங்ஙனமெனின் மலர்ச்சி, உயர்ச்சி, அசைவு, கலக்கம் முதலிய உள்ளவுணர்ச்சிகளை ஒன்றிற்குமேற்பட திரையோவியமெனினும் சிலையோவியமெனினும் காட்டுதல் அரிதுஎன்பதே.

ஆயின், பாவலர் மாட்டும் ஈதிப்படியோ வெனின் அப்படியன்று. ஒருபாவிலேயே அவர்கள் வேண்டிய உணர்ச்சிகளெல்லாம் ததும்பியெழும்படி எழுதிவிடுவர். மகிழ்ச்சியைத் தரும் அழகிய ஓவியங்களைப் பாமூலம் சித்திரிக்கும் பாவலர் பலர் அவற்றிற்கு வரம்பொன்று வரைந்துள்ளார். சிறந்த அழகுடைய உருவத்திற்கு வரம்புயாதெனின் அதனை எவ்வாற்றானும் வருணித்துக் காட்டொணாத்தன்மையே என்பர். இப்படியாகப் பாவலர் எழுதொணா ஓவியங்களுள்ளேயே மிகச்சிறந்த உருவ அழகை அமைத்துள்ளார். இவற்றுள் சிலவற்றை ஈண்டு ஆராய்வோம்.

மணிவாசகருடைய திருக்கோவையாரின் முதற்பாட்டில் தலைவன் தலைவியைக் காண்பதாகக் கற்பித்துப் பாடிய பொழுது அவளுடைய உருவம் கூறப்படவில்லை. ஐந்திணைப் பூக்களாலும் ஐந்து அவயவங்கள் வருணிக்கப்பட்டன. முகம், கண், மூக்கு, வாயெனத் தொடங்கிப் பாதத்திலே முடித்தனராதலின் இது கேசாதிபாதவருணனை என்பர் இலக்கணநூலார். ஆயின் இப்பாவினைக் கொண்டு அப்பெண்ணின் உருவை ஓவியக்காரன் சித்திரிப்பானோவெனின் அது இயலாதாகும்.

இப்படியே பாங்கன் வினாயவழியும் தலைவன் பெண்ணினழகை எடுத்துரைக்க முடியாது போகின்றான். அவன்

பாங்கனையே ஒருமுறை சென்று காணும்படியும் அது தன்னால் வருணிக்கமுடியாது வரையிறந்த அழகென்றும் சொன்னான்.

"காணிற் கழறலை கண்டிலை மென்றோட் கரும்பினையே" என்னுங்கால் அவ்வுருவம் தலைவனால் படம்பிடித்துக் காட்ட முடியாததாகத் திகழ்கின்றதை நாம் காணலாகும்.

நெடுநல்வாடையில் மெல்லியல் மகளிரை வருணிக்கும் நக்கீரர் "புனையா ஓவியங் கடுப்ப" என்று அவர்களுடைய உருவம் பலநிறப் பூச்சுக்களால் அமைத்துக் கீறவொண்ணாத தென்னும் கருத்துப்படக் கூறினர். இதுவே பெண்களின் உருவ அழகிற்குக் காணும் ஒருசிறந்த வரம்பாகும்.

சிந்தாமணி யாசிரியரும் இவ்விஷயத்தில் எவருக்கும் பின்னிற்பவரல்லர். சீவகன் குணமாலையின் அழகையும் அவளைத் தான் யானையினின்றும் காப்பாற்றியபோது ஏற்பட்ட மெய்ப்பாடுகளையும் விளக்கிக்காட்டும் படத்தைக் கிழியொன்றின்மேல் அமைக்க ஆரம்பிக்கின்றான். அதற்குப் பல நிறமணிகளை உரைத்து அவற்றால் பெற்ற வருணங்களைப் பாவிக்கின்றான். அவனே குணமாலை "வெருவிநின்றதோர் நாட்டமும் நடுக்கமும் நங்கை வண்ணமே" தீட்டவேண்டி முயன்றான். இப்படிப்பட்ட மெய்ப்பாடுகள் ஒரேபடத்தில் தோன்றல் எளிதன்று. ஆதலால் அவன் மிகமுயன்று தன் கலைஞானம் யாவற்றையும் உபயோகித்து அவளுருவத்தை அப்போதைய மெய்ப்பாடுகள் தோன்றச் சிருட்டிப்பானாயினான். இப்படம் முடியுமுன் காந்தருவதத்தை வந்து அதனைக் கையாடிக் கொண்டாளாதலால் இதுவும் ஓர் எழுதொணா ஓவியமாகும். அன்றியும் புலவர் கற்பனையாலன்றி வெருவிய நாட்டமும், நடுக்கமும், காதல்நோக்கும் ஒருங்கே ஒரேசித்திரத்தில் அமைதல் அசாத்தியமாதலாலும் இஃது எழுதாஓவியமே.

இனி, மணிமேகலையை வருணிக்கும் ஆசிரியர் "புனையா ஓவியம்போல நிற்றலும்" என்று அவளுடைய அழகிருந்தவாற்றைக் கூறுகின்றார். இதுவும் வண்ணங்களைக் கொண்டெழுதாத ஒரு சித்திரமாகவே தோன்றுகின்றது.

இப்படியே அப்பர் சுவாமிகளும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் சிறந்த அழகுருவைப் படம்பிடிக்கமுடியாது தம்மனத்திலேயே ஒரு சிந்தனை ஓவியஞ் செய்து கொண்டார். "இப்படியனிந் நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்றும், அருட்கணாற் காணி

னன்றிக் காணொணுதென்றும் கூறுவாரவர், இங்கே கடவுள் தாமும் ஓர் எழுதொணு ஓவியராகின்றுரன்றே! சேக்கிழார் பெருமான் பரவையாரின் உருவத்தைச் சுந்தரருக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்துகின்றார். அவ்வுருவைக் கண்ட சுந்தரனார் மனத்தில் பற்பல ஐயுறவுகள் எழுகின்றன. "புயல் சுமந்துவிற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ?" என்றெல்லாம் எண்ணி யெண்ணி ஈற்றில் அவ்வழகிற்கு ஒரு முடிவுகூறுகின்றார்.

"ஓவியம் நான்முகன் எழுத ஒண்ணுமை உள்ளத்தால் மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ;" என்று, பிரமனும் உருவகிக்க முடியாத அத்துணையழகிய தோற்றத்தை யுடையாள் பரவைப்பிராட்டியார் என்கிறார்.

இனி, கம்பநாடார் நமக்கீயும் ஓவிய வடிவங்களை ஆராய்வோம். மிதிலாநகரம் எப்படிப்பட்டதென்பதை வாசகர்களுக்கு விளங்கவைக்கு முகத்தான் சீதையினழகையும் மிகச் சிறப்பாகக் கூறிவிடுகின்றார் அவர்.

"ஆதரித்தமுதில் கோல்தோய்த்து அவயவ மமைக்கும் தன்மை, யாதெனத் திகைக்குமல்லால் மதனற்கு மெழுத வொண்ணுச், சீதையைத் தருதலாலே....!" அந்நகரம் மிகவும் கீர்த்தி வாய்ந்ததாக ஏனைய நகரங்களிலும் பார்க்க முன்னணியில் வைத்துப் பாராட்டப்பட்டது. இங்குச் சீதாபிராட்டியின் உருவத்தை அமுதில் தோய்த்தகோலால் அனங்கன் எழுத முயலுவது ஆச்சரியமுடையது. இன்னும் அவன் எழுதமுடியாது திகைத்து நிற்பது மேன்மேலும் ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. ஆதலின் அழகிற்சிறந்த மன்மதனும் மருளும் உருவம் சீதைக்குடையதென்பதைப் புலவர் இவ்வாறெடுத்துரைத்தனர். இங்கும் அழகிற்குவரம்பாகிய சீதையின் உருவம் எழுதொணுவொன்றுக நிற்கின்றது. இனி, சுந்தர காண்டத்திலும் இச்சீதாபிராட்டியின் உருவத்தையே "அனங்கவேள் செய்த ஓவியம்" என்று கூறுகின்றார் கம்பர். முன்னெருமுறை இவ்வனங்கவேளே அவளுருவை அமைக்க முயலுங்கால் இயலாது திகைத்தானுதலால் இவ் வோவியமும் அவனால் சமைப்பிக்கப்பட்ட எழுதொணு வோவியமாகின்றதன்றே!

கொடியகாட்டில் கால்நடந்த களைதீரும்படி இராமன் சீதையைத் தேற்றிக் கொண்டு செல்லுகின்றான். அப்படித் தேற்றுமிடத்திலெல்லாம் அவளை இனிய ஆதரவு மொழிகளால் விளித்து விளித்துப் பெருமைபாராட்டிக் கொண்டே இயற்கை

வனப்புகளைக் காட்டி வருணித்துக்கொண்டு செல்லுவான். ஓரிடத்தில் அவன் அவ்வழகியைப் பின் வருமாறு விளிக்கின்றான். "ஏந்திள முலையாளே! எழுதருமெழிலாளே!" இப்படிக் கூறுமிடத்து இராமனும் அவளுடைய உருவம் எழுதொணாதென்பதற்குச் சான்றுபகர்கின்றானன்றோ!

இனி, காவியத் தலைவனாகிய இராமனின் வருணனையையும் பார்ப்போம். அழகுபெண்களுக்கே யுரியதென்பர் அறிவிலர். அது ஆடவர்க்கே யுரியதெனக் காட்டுவன் இராமன். மிதிலையில் ஜனகனுக்குத் தசரதகுமாரரை அறிமுகப் படுத்தும் விசுவாமித்திரர் முறைப்படி இராமனை எடுத்துக் கொண்டார். புண்ணியபுருஷனான அவன் உருவமே அங்கும் முன்னணியில் எடுத்துரைக்கப்படுகிறது. "இருங்கடகக் கரதலத்தில் வெழுதரிய திருமேனிக், கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பாள் பயந்தாள்" இங்கு இராமனின் எழிலுருவம் ஓர் எழுதொணா ஓவியத்தின் காட்சியென எடுத்தோதாதே புலனாகும். இக்கருத்தையே கம்பர் சூர்ப்பணகைப் படலத்திலும் தருகின்றார். அந்த, "வஞ்சியென நஞ்சமெனவந்த வஞ்சமகள்" இராமனின் அழகைக் கண்டு சொக்கியே விட்டாள்! ஆதலின் அவள் அவனை வருணிக்குமிடத்து "எழுதரு மேனியாய்" என்று விளிக்கின்றாள். இவளுக்கும் இராமனுடைய உருவம் அழகுக்கோர் வரம்பாகவே தோன்றிற்று.

இவ்விதமாகவே நாம் எங்கெங்கு அழகின் வருணிப்பைக் காண்கின்றோமோ அங்கங்கெல்லாம் அதன் எல்லை கூறுமிடத்துப் புலவர்கள் அதனைக் கூறாதே விடுகின்றார்கள். அது கூறொணா அத்துணைச் சிறப்புடையதாதலின் என்க. இவ்வழகிற்கு வரம்பாக நிற்கும் உருவங்களையே நாம் எழுதொணா ஓவியங்களெனக் குறிப்பிட்டோம். இன்னும் ஆராயின் பல இப்படி எழும்.

கலித்தொகையி லொருகதை

[மகிழ்நன்]

(முன் ௫௨௪ -ஆம் பக்கத்தொடர்ச்சி)

இங்ஙனம், தரையை உற்று நோக்கியும் மேல் நிமிர்ந்து பார்த்தும் தினைப்புனத்தை ஒப்பிலான் நெருங்க, அங்கு வந்து நின்ற கயற்கண்ணி, முந்தியநாள் தன்னைக்கண்டு நீங்கிய பெருமகன் வருகையை உள நிறைந்த உவகையோடு கவனித்தாள். அவனது நடிப்புப் பொருளில்லாப் புன்செயல்போல் அவளுக்குத் தோன்றிற்றெனினும், அவன் நிகழ்த்திய ஒவ்வொன்றையுமவள் ஆவலுடனும் புன்முறுவலுடனுங் கூர்ந்து நோக்கினாள். காதற் கடலில் மூழ்கிய கயற்கண்ணிக்கு, அவனுந் தானுந் தினைப்புனமுமேயன்றி வேறொன்றுமின்றி அகன்ற இவ்வையகங் குறுகிப்போயிற்று. அவன் தன்முன் வந்து நின்று, முகமலர்ந்து குழைந்து, இனிய பல பேசித் தன்னை மகிழ்விக்கும் நேரம் அண்மையிலுளதை எண்ணக் கயற்கண்ணியினுள்ளந் துள்ளிற்று.

ஓடிவந்த ஒப்பிலான், தாழ்ந்து நிமிர்கையில் அவள் நிற்குமிடத்தைக் கடைக்கண்ணால் குறித்துக் கொண்டான். புனத்தையணுகியபின் தலை நிமிர்ந்துபாராது கீழ் நோக்கி நடந்து, அவளருகில்வந்து, சிறிதும் அமைதி பெறாதவனாய் வருந்தி நின்றான். பேசுவதற்கு அவனது நாவெழவில்லை. இதுகாறுமவன் உளத்திருந்த உறுதி கரைந்தது. தலையைத் தொங்கவிட்டு நின்றான் தனக்கிணையில்லா நன்மகன். இரங்கத்தக்க இந்நிலை இருவருக்கும் இன்னாததாயிற்றென்பதை எளிதில் எவருமுணர்தல் கூடும். ஒருவரையொருவர் நொடிப்பொழுது பார்த்து வெட்கிப் பார்வையை வறிதே வேறிடத்திற் செலுத்தி எவ்வளவு நேரம் நிற்பர்? "காட்டியானை ஒன்றின் அடியைத்தொடர்ந்து ஈண்டுவந்தேன். அஃதிவ்வழிச் சென்றதுண்டோ?" என்று கைகளாலுங் கண்ணாலும் ஒப்பிலான் வினவினான். அவனது செய்கையின் பொருளிது வென்றறிந்த கயற் கண்ணி, "இதற்கோ இத்துணை வருத்தம்?" என்ற வியப்புடன், காதளவு நீண்ட கண்ணின் வெண்பகுதி பெருகித் தோன்ற, இளநகை இதழ்களில் முகிழ்க்க, இனிமை யொழுகத் தன்முன் கூசி நின்ற மகனை நோக்கினாள். அவனோ ஒன்றுஞ் சொல்லவுஞ் செய்யவு மாட்டானாய்த் திகைத்து, வறியனாய் விழித்து, அங்கிருந்து நீங்கினான்.

இத்தன்மையனாகிய ஓரிளமகனுடன் ஒரு நங்கை என் செய்வாள்? அகன்றுபோகு மவனைப் பின்தொடர்ந்து செல்வாளோ? "வல்விலங்கைத்தேடி நடந்த களைப் பாறச் சிறிதமர்ந்து போமின்" என்றுரைப்பாளோ? "ஐயனே, யானையைக் கண்டேன். அஃதிவ்வழிச் சென் றது. என்பின் வம்மின்" என்றழைப்பாளோ? பெயர்ந்து செல்கின்ற இளமகனைப் பரிவுடன் பார்த்த கயற்கண்ணி, "உலகெலா மொருங்கு வந்தெதிர்ப்பினும் நிலைகலங்காத் திண்மை யுடைவன்போல் தோன்றுகின்ற இவன் என்னுளங் குளிர ஒன்று சொல்லு மாற்றலற்றவனென்று எங்ஙனம் நினை ப்பேன்? வளம்நிறைந்த மனையில் வளர்ந்த இம்மகன் ஒன்று மிலாப் பேதை என என்முன்வந்து எளியனாய் நின்றதன்மை, எண்ணுந்தோறும் என்நெஞ்சை இளக்குகின்றது. "உரைபகரு மதுகையின்றி விரைந்து செல்கின்றவனே உன்முகத்தில் நீ காட் டிய காதல் என் முகத்தில் விளங்குவதை அறியாய் கொல்? ஆணுக்கமைந்த பெற்றியெலாம் பெற்ற நீ, பெண்டிர் முன் நாணு மியற்கையுடையனாயிருத்தல் வியப்பைத் தருகின்றது. நாணொழித்து யான்முதலிற் பேசவேண்டு மென்று எதிர் பார்த்தல் உனதாண்மைக் கழகன்றே! ஆண்மையிற் பெண்மை யைக் காட்டுகின்றவனே! பெண்மையி லாண்மை என்பால் வெளிப்படு மென்று நினைந்தனையோ! கண்ணுக்கினியாய், எண்ணுதற்கும் நீ இனியை; ஈரநெஞ்சினாய், வாராயோ?" என்று இரங்கி அவன் ஒருமுறையாயினும் பின்திரும்பிப் பார்ப் பானென்று அவன் சென்றவழியே சிறிது நடந்தாள். ஆணொழி லண்ணலோ, சுடுமணலைக் கடப்பவன்போல் அடிவைத் தோடினன்.

காலைப்பொழுது கழிந்து கடுவெயில் பெருகும் நேரமா யிற்று. ஓடியமகன் வீடுபோய்ச்சேர விருப்பமின்றிக் கானிலும் வெளியிலும் அலைந்து திரிந்தான். புனத்திலிருந்த மகள் புலம் பிப் பொழுதைப் போக்கினள். இருவரும் மற்றோரிரவைத் துயிலின்றிக் கழித்தனர்.

மறுநாள் விடிந்தது. புனத்தருகே நின்ற குன்றினுச்சி யில் வில்லுடன் நின்றான் ஒப்பிலான். இன்றாயினு மினியான் கூச்சம் நீங்கித் தன்னுடன் பேசுவானென்ற நினைவினளாய்க் கயற்கண்ணியுந் தனியே புனத்திற்கு வந்தனள். முந்தியநாள் நடத்திய நடிப்பை மற்றொரு முறை ஒப்பிலான் ஊமையனாய் நிகழ்த்தினன். நிகழ்த்தி, வாய்திறவாது சென்ற அவனைக் கண்ணிமையாது நல்லாள் பார்த்தாள்.

இங்ஙனம் சிலநாள் சென்றன. பொறுத்தற்கரிய துன்ப மெய்திய கயற்கண்ணி, தன்னைப்போல் அவனும் உருகுவா னென்பதை யறிந்து, "செய்யத்தக்கது யாது?" என ஆராயலா ளாள். நடு யாமத்திற் பலநாள் விழித்திருந்து நீள நினைந்தும் அவளுக்கொரு வழியுந் தோன்றவில்லை: "அவனோ தனது குறையை எனக்கு எதிர்நின்றுகூற இயலாதவனாய் வருந்து கின்றான். 'உனது வருத்தங்கண்டு யானும் வருந்தினேன்.' என்று யான் அவனுக்குக் கூறுதல் பெண்மைக்கழகன்று. இந்த நிலையை அவன் ஆராய்ந்து பாராது, தாங்கொணாத் துன் பத்தால் உயிர்விடினும் விடுவான்," என்ற அச்சந்தருமெண்ணம் அவளை வந்து வாட்டிற்று. நாடோறும் மெலிந்துபோகின்ற அவனது நிலை இவ்வச்சத்திற்குக் காரணமாயிற்று. இரவில் இங்ஙனம் கருதிய கயற்கண்ணிக்கு ஒரு சூழ்ச்சி தோன்றியது. அச்சூழ்ச்சி தோன்றியபொழுதே அவளுக்குப் பெருநாணத் தை விளைத்தது. அஃது ஒவ்வாதென்று தள்ளிவிட எவ்வளவோ அவள் முயன்றும் கூடவில்லை. வேறு யாதேனும் வழி இல்லா விட்டால் அதையே செய்வதென்று கயற்கண்ணி துணிந்தாள்.

மறுநாள் புனத்திற்குச் சென்ற கயற்கண்ணி, ஒப்பிலான் வழக்கம்போல் தன்னை நாடிவந்தபொழுது, தான் ஆடும் ஊச லிற் போயமர்ந்தாள். இளைத்த மேனியனாய் அங்கு வந்த ஒப்பி லானை நோக்கி, அவள் தன் செவ்வாய் திறந்து, மெல்லிய, இனிய, அமர்ந்தகுரலில், "ஐயனே! ஊசலைச் சிறிது என் பொ ருட்டு ஆட்டமாட்டாயோ?" என்று கரைந்து கேட்ப, வழி படு கடவுள் கட்புலனாகி எண்ணியதை அளிக்க அது பெற்று மகிழ்ந்தவனை யொப்ப, ஒப்பிலான் களித்து, "தையால், நன்று; அவ்வாறு செய்வேன்" எனப் பகர்ந்து, பின் நின்று ஊசலைப் பிடித்து முன்னே செலுத்தினான். இங்ஙனம் இருவருடலுந் தீண்டுகின்ற நிலை ஏற்பட்ட காலையும், பேரடக்கமு மிரக்கமு முடைய ஒப்பிலான், அவள்மீது தன் உறுப்புக்களொன்றும் படாவகையில் ஊசலை இயக்கினான். இவ்விளமகனின் அடக்கங் கண்டு யாம் வணங்குதும்; பன்முறை வணங்குதும்.

பெண்டிரைத் தம் முடைமை யென்று கொண்டு அவர் மென்மையைத் தமக்கியைந்தவாறு பயன்படுத்திக்கொள்ளும் பேயர், ஒப்பிலானது பகர்தற்கரிய ஆண்மையை யுணர்ந்தின் புறுதல் கூடுங்கொல்? அவனைப் பேதையென்றன்றோ அவ ரிகழ்வர்? ஆண்மையிற் பெண்மையுடைய னெனக்கருதிய கயற் கண்ணி, ஆண்மையி லாண்மையுடைய னவன் என்பதை இன் றறிந்தாள். இருமுறை முன்னே சென்று, பின்னேவந்து ஊசலை

இயக்கியும் அவனுடல் தன்னைத் தீண்டாததை யறிந்த கயற் கண்ணி, அவனது சிறந்த ஒழுக்கத்தை யுன்னி மகிழ்ச்சியும் பெருமையும், தான் கருதியது நிறைவேறுததை நினைந்து துன் பமுங் கவலையு மடைந்தனள். இன்னுமொருமுறை ஊசலை விரைவாய்ச் செலுத்தியபின், அது சாலுமென்று நன்மகன் நீங்கினும் நீங்குவனென்று கயற்கண்ணி எண்ணி, ஊசற்கயிற் றைப் பிடித்திருந்த கைகளை நெகிழவிட்டுப் பொய்யாக அவன் மார்பில் விழுந்தாள். ஊசலைத் தான் ஆட்டிய விரைவால் மயக்கமுற்று விழுந்தனளென்று கொண்ட பெருமகன், அவ ளைத் தழுவி யெடுத்துக்கொண்டு, மேல் என்னசெய்வ தென்றறி யாது விழித்தான்.

இதற்கிடையில், கண்மூடிச் சாய்ந்து அவன் மார்பிற்கிடந்த நங்கை அவனது முகத்திற்றோன்றிய குறிகளைக் கள்ளத்தன மாய்க்கண்டு, "இந்நிலையிலு மிவன் தன் உறுதியைக் கை விடாது, எனக்குவரு மிழிவையே பெரிதாய்க் கருதி, இங் கிருந்தகன்றுவிட நினைக்கின்றான். இனியனிவன். கருதரிய கண்ணோட்ட முடையான். இவனைப்போற் காதலனைப் பெறும் பேறு அரிது. இப்பொழுதியான் விழித்தெழுவேனாயின், 'எவரேனு மிங்குவந்து விடுவர். நீ எழுந்து செல்வது நன்று.' என்று கூறி என்னைப் போக்கிவிடுவானென்பதில் ஐயமின்று. ஆதலின், மயக்கந் தெளியாதவள்போல் இன்னுமிருப்பேன்" என்று கிடந்தபடி கிடந்தாள். இச்செய்தியைக் கூறுங் கலிப் பாட்டைக் காண்க :—

"கயமல ருண்கண்ணாய் காணா யொருவன்
வயமா னடித்தேர்வான் போலத் தொடைமாண்ட
கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு
முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்;
பாயல் பெறேஎன் படர்கூர்ந் தவன்வயிற்
சேயேன்மன் யானுந் துயருழப்பே னாயிடைக்
கண்ணின்று கூறுத லாற்றா னவனாயிற்
பெண்ணன் றுரைத்த னமக்காயி னின்னாதூஉங்
காணான் கழிதலு முண்டென் றொருநாளென்
றோணெகிழ் புற்ற துயராற் றுணிதந்தோர்
நாணின்மை செய்தே னறுநுதா லேன
லினக்கிளி யாங்கடிந் தோம்பும் புனத்தய
லூசலூர்ந் தாட வொருஞான்று வந்தானை
யைய சிறிதென்னை யூக்கி யெனக்கூறத்
தையா னன்றெனறவனூக்கக் கைநெகிழ்பு

பொய்யாக வீழ்ந்தே னவன்மார்பின், வாயாச்செத்
தொய்யென வாங்கே யெடுத்தனன் கொண்டான்மேன்
மெய்யறியா தேன்போற் கிடந்தேன்மன் னாயிடை
மெய்யறிந் தேற்றெழுவே னாயின்மற் றொய்யென
வொண்குழாய் செல்கெனக் கூறி விடும்பண்பி
னங்க ணுடைய னவன்.''

(குறிஞ்சிக்கலி க.)

இதற்குரை யெழுதிய ஆசிரியர், இது தோழி கூறியதென்றும், படைத்து மொழிந்த தென்றும் பகர்வர். அது கருதாது பாட்டிற் சொன்னவற்றையே தழுவிச் சில கூட்டி இக்கதை முடிக்கப்பெற்றது.

அகத்துறையுட் கண்ட சில கற்பு முறைகள்

[திரு. M. K. தணிகாசலம், திருவையாறு]

வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து வழக்கானும், செய்யுளானும், பண்டைக்காலந்தொட்டுத் தலைசிறந்தோங்கிவரும் மொழி, நம் செந்தமிழ்மொழியொன்றேயாகும். அறிஞர்களதனை அகம், புறமென இருபொருளாகப் பாகுபடுத்திக் கூறுவர். அவையிற்றில் முன்னதிற் கண்ட சில கற்பு முறைகளை யீண்டுக் காண்போம்:—

களவிற் புணர்ந்த தலைவி, "பிறைதொழாதிருத்தல்" என்னை? கணவிற்றுனடைந்த கணவனையல்லாது வேறு தெய்வமில்லையென்பது கற்பினிலை.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்பதாற் றெளிதாயினள்.

பாங்கி மதியுடன்பாட்டில், "முல்லைமாலை சூட்டிச்சென்றதாகக்," கூறுவதும் தலைவியின் கற்பையறிவிக்கும். தலைவன், "இயற்கைப் புணர்ச்சி" நடந்த பின்னர் தலைவிக்கு முல்லைமாலை சூட்டிவிடுதல் மரபு. கற்புக்குமழகு.

மேலும், "ஊர்துஞ்சாமை"யைத் தலைவி தோழிக்குக் கூறும்போது, "தாங்கண் ணனையார் தமைப்பிரிந்தோ நந் தனிமைகண்டோ, நாங்கண் ணுறங்கினுமோ வுறங்கார்கண் ணக ரவரே,"

என ஆடவரை நீக்கி மடவார் செயலாகக் கூறப் பட்டுள்ளது. என்னை? கற்புக்கடம்பூண்டோர், தம் தலைவனை யன்றிப் பிற ஆடவரை மனத்தால் நினைத்தலுங் கூடாதென்பது. ("மனத்தால் நினைத்தலுஞ் செய்தலோடொக்கு"மென்னும் பரிமேலழகருரை யீண்டறியற்பாலது.) இதனாலும் தலைவியின் கற்பு வெளிப்படும்.

இனி, புனல்தருபுணர்ச்சி களிறுதருபுணர்ச்சி முதலியவை களும் கற்பைத் தெரிவிக்கும். என்னை?

"இப்புணர்ச்சிகளில் தலைவன் தலைவியை அஞ்சேலெனத் தன்மார்புடனணைத்துக் காத்துள்ளான். ஆதலின் தலைவி அவனைத் தவிர்த்து மற்றொரு தலைவனைச் சேரும் பெற்றிய ளல்லள். அங்ஙனஞ்செய்யின் அவள் கற்புக்கிழுக்காம்," என்னுங் கருத்துடன் தோழி செவிலிக் கறத்தொடு நிற்றல்.

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலா
னீணாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போதந்தா னகனகலம்
வருமுலை புணர்ந்தன வென்பதனா லென்றோழி
யருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே"

இக்குறிஞ்சிக் கலியும் (௩) நச்—உரையும் மேலதை வலி யுறுத்தும்.

தலைவனுந் தலைவியு முடன்போக்கில் சென்றுவிட்டனர். அதுபோது தலைவியைக் காணாத செவிலி வருத்தத்துடன் தேடி யலைகின்றாள். இவ்வாறு பலவிடங்களிலுங் காணாது, திகைக் குங்காலத்து, இடைச்சுரத்தில் இதுபோன்று, இருவர் உடன் போக்கு வருகின்றனர். அவர்களைக் கண்ட செவிலி, "நுங்களைப் போல் ஒரு தலைவனையுந்தலைவியையும் வழியிற்கண்டதுண்டா?" என்று வினவ, தலைவன் கூறுகின்றான்:—

"யான் கண்ட வண்ணலு மெண்ணருங் காதலி னேகியவென்
மான் கண்டனகண் மயில்கண்ட மாதரும்
....................................." என்று. (தஞ்சை. 347)

இதனாற் போதருவதென்னையெனின், ஒரு தலைவன் வேற்றுத் தலைவியைக் காணக் கூடாதென்பதும், ஒரு தலைவி வேற்றுத் தலைவனைப் பார்க்கக் கூடாதென்பதும்.

ஆதலின் இருவர் கற்புமுறையும் வெளிப்படுகின்றன.

"..வெண்ணிய
வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாந்
தண்சுட ரன்னானைத் தான்"

(திணைமாலை நூற்றைம்பது)

என்பதுமது.

"மலரன்ன கண்ணாண் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி"

என்னுங் குறளுமது.

"நாணினுந் தாரணி கற்பு நன்றென்கை நயந்து"

(தஞ்சை. 348)

"நாணைப் பார்க்கிலும், முல்லைமாலையணிந்த கற்பு நன்று என்பதனை விரும்பிச் சென்றாள்." (ஷை உரை)

எனச் செவிலி கவலை கூர்தலும், தலைவியின் கற்பை யறிவிக்கும். மேலும் "தலைவியைப் பாங்கியச்சுறுத்தல்", என்னுந் துறையில், "துன்பமுறவே அத்துன்பத்தால் நலனழியும், நலனழியவே அன்னைக் கையந்தோன்றும், தோன்றவே இற்செறிப்புவரும், வேற்றுவரைவு நேரினும் நேரும், ஆதலான் கற்புக் கெடுமென்று அச்சமுறுத்திக் கூறியவாறாயிற்று" என்னுமுரையும் தலைவியின் கற்பைக் காட்டும்.

தஞ்சைவாணன் கோவை வரைவியலில், "தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல்", எனத் தலைவி தோழியிடம் கூறும் பகுதியுமது. என்னை?

தலைவன் தெய்வத்தின்முன் பிரியேனென்றானைகூறிப் பிரிந்து சென்றானாதலால், அவனை அத்தெய்வம் வாட்டும், தலைவனுக்குத் தீங்குநேரும், நேரவே வேற்றுவரைவு நிகழும், அதனால் நம் கற்புக்கெடுமென்னு முட்கருத்துடன் கூறுகின்றாளாதலின்.

"நின்றேகை கற்பினிலைமை யெண்ணுதெதிர் நின்று
வென்றிட்டன்றோ வடக்கிருந்தாண் மடப்பாவை யருந்ததியே"

என்று செவிலி நற்றாய்க் குணர்த்தும் பகுதியும் தலைவியின் கற்பை வெளிப்படுத்தும்.

“உயிரினுஞ் சிறந்தன்று நாணே...............
..............................தோற்று மன் பொருளே,”

என்னுந் தொல்காப்பியக் களவியற் சூத்திரத்தில்,

“சிறுபான்மை வேறுபட்டு வருவனவற்றைக் கற்புச் சிறப்ப, நாண் துறந்தாலும் குற்றமின்றென்றற்குச் “செயிர் தீர்” என்றார், “நன்மொழி” யென்றார் கற்பிற்றிரியாமை யின், என்னும் நச்—உரை, பார்க்க.

“மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே”

(குறுந். 31)

யாண்டுங் காணேனென அவனை வழிபட்டுக் கூறினமையிற் கற்பின்பாலதாய்த் தோழியுந் தலைவனும்,

“பெண்டன்மையிற்றிரியக் கருதாது நன்கு மதித்தவாறு”
(தொல்—களவியல்—ஷ சூ. நச். உரை)

இவைகளினால் தலைவியின் கற்பு வெளிப்படும்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழி நம் தமிழ்மொழி யொன்றேயாகும். அம்மொழியைப் பொன்னேபோற் போற்றி இன்னுஞ்சிறப்புறச் செய்வது தமிழறிஞர் கடனாகும். இதற் கிடையூறாக வரும் புன்மொழிகளை நந் தமிழ் நாட்டில் தலைகாட்டாது அடித்துத் துரத்தவேண்டிய ஏற்பாடுகளைத் தமிழ்ப் பெரியார்கள் விடாமுயற்சியுடன் செய்து, நந் தமிழ் மொழியை நம் நாடெங்கும் பரவச்செய்து, நம் செந்தமிழன் னையை நிலைநிறுத்துவாராக. பொங்கும் மங்கள மெங்குந் தங்குக.

பெண் அஃறிணையா?

[வித்துவான், மு. வரதராசன், B. O. L.]

'செவி கைப்பச் சொற் பொறுத்தல்'

"'அம்மா சமையல் செய்கிறாள்', 'அத்தை பணம் தருவாள்', 'அக்கா கடிதம் எழுதினாள்', 'தங்கை பள்ளிக்கூடம் போயிருக்கிறாள்' என்று சிலர் பேசுகின்றனர். 'செவி கைப்பச் சொற்பொறுத்தல்' என்பது இச்சொற்றொடர்களைக் கேட்டுப் பொறுத்தலே" என்றார் நண்பர் அடியார்க்குநல்லார்.

"இச்சொற்றொடர்களில் எழுவாய் பயனிலை பிழை ஒன்றும் இல்லையே. அம்மை; அத்தை, தமக்கை, தங்கை என்பவை உயர்திணைப் பெண்பாற் பெயர்கள், செய்கிறாள், தருவாள், எழுதினாள், போயிருக்கிறாள் என்பவை அத்திணையும் பாலும் குறிக்கும் வினைமுற்றுக்கள். ஆதலால் இவை தவறாதல் இல்லையே!!" என்றார் நண்பர் பரிமேலழகர்.

"ஐயா! இலக்கணப் பிழைபற்றி இங்குப் பேச்சு வேண்டா. பொருளைக் காண்க. திணையோ பாலோ வேண்டா. அவள் என்றும், இவள் என்றும், வந்தாள் என்றும், செய்கிறாள் என்றும் பேசுதல் நாகரிகமா?" என்றார் முன்னவர்.

"ஓ! அப்படியானால், 'அம்மா சமையல் செய்கிறார்' 'செய்கிறார்கள் (செய்கிறாங்க)' முதலான சொற்றொடர்களால் பேசுதல் வேண்டும்போலும். அர் ஆர் என்னும் விகுதிகளும் கள் என்னும் விகுதிமேல் விகுதியும் சேர்ந்தாலேதான் நாகரிகமும் மதிப்பும் உண்டு என்று கருதுகின்றீரே! வெறுஞ்சொற்களால்—சில விகுதிகளால் மதிக்கும் மதிப்புத்தானா சிறந்தது? இதுதானா தமிழர் நாகரிகம்?" என்று பரிமேலழகர் வினவினார்.

அடியார்க்குநல்லார் அமைதி இழந்தார்; தம்மை மறந்து பேசத் தொடங்கினார்; "நன்று, நன்று; சொற்களால் மதிக்கும் மதிப்புத் தங்களுக்கு வேண்டாபோலும்! பெண்ணைக் குறிக்கும்போதுமட்டும் இவ்வாறு பேசுகின்றீரே! ஆணைக் குறித்து உமது கருத்து என்னை? 'அப்பா ஊருக்குப் போகிறான்' 'மாமன் பணம் தருவான்' என்று நீர் பேசுகின்றீரா? இல்லையே. 'அப்பா ஊருக்குப் போகிறார்' அல்லது 'போகிறார்கள்' 'மாமா பணம் தருவார்' அல்லது 'தருவார்கள்' என்று பேசுகின்றீர். 'பாதர் (Father) வந்தார்' என்று மதிப்புடன் சொல்லும் வாயால் 'மதர் (Mother) வந்தாள்'

என்று சொல்லுகின்றீர். 'பிரதர் (Brother) சொன்னார்' என்று பேசுகின்றீர்; ஆனால் 'ஸிஸ்டர் (Sister) சொன்னாள்' என்கின்றீர். இந்த வேறுபாடு ஏன்? விகுதிகளால் மதிக்கும் மதிப்பு உம்மிடம் இல்லையோ?" என்றார்.

'பெண் உயிரில்லா பொருளோ?'

உடனே, பரிமேலழகர் பரபரப்புடன் சில கருத்துக்களைக் கூறத் தொடங்கினார். "அப்படியா? 'தமக்கை வந்தாள்' என்று சொல்லுகின்றமுறை ஒருவகையில் ஏற்புடையதே ஆகும். ஆங்கில மொழியை ஆராய்க. ஒருவனையோ ஒருத்தியையோ அவர் என்று கூறும் வழக்கு அம் மொழியில் இல்லை. ஆணை 'ஹி (He)' என்றே வழங்குவர்; பெண்ணை 'ஷி (She)' என்றே வழங்குவர். அந்த முறை பகுத்தறிவுக்கு இயைந்தது. எனவே, 'தமக்கை வந்தாள்' 'தங்கை போனாள்' என்று பேசுதல் குற்றமாகாதே! ஆனால், 'தமக்கை வந்தது' 'தங்கை போனது' என்று நீர் பேசுகின்றீரே! அது நாகரிகந்தானா? உம்முடைய கண்ணுக்குப் பெண் உயர்திணையாகத் தெரிவதில்லையோ? 'நாய் போனது' 'பூனை வந்தது' என்பதுபோல, பெண் ஒருத்தியைக் குறிக்கும்போது 'போனது, வந்தது' என்று பேசுதல் தகுமோ? அன்றி, பெண் உயிரில்லாத பொருளோ? மரம், கல் முதலியவற்றிற்கு ஒப்பாகக் கருதுகின்றீரோ? அது போனதாம், இது வந்ததாம்—நல்ல பேச்சு ஐயா! தமக்கையையும், தங்கையையும் சுட்டிப் பேசும்போது என்ன சொல்லுகின்றீர்? அது சொன்னது, இது கேட்டது என்கின்றீர். தமக்கையும் தங்கையும் அதுவும் இதுவுமா? எண்ணிப்பார்த்தால் குறை தெரியும் ஐயா? 'ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம்' காணல் வேண்டாவோ?" என்று பேசிக் கொண்டே போனார்.

அவர்தம் பேச்சு முடிவுபெறவில்லை. மற்றொரு நாள் தொடர்ந்து நிகழும். அப்பேச்சு விளக்குவது என்னை? பிற்காலத் தமிழில் பெண் உற்ற சிறுமையை விளக்குகின்றது என்னலாம். ஆணை மதித்து உயர்வாகக் கூறியவர் பெண்ணை உயர்த்தாது விட்டது தவறன்றோ?

பெண்ணுக்குப் பகுத்தறிவு இல்லையோ?

சொற்பொருள் அமைதியிற் சிறந்தது தமிழ்மொழி. அத்துறையில் உலகில் வேறொரு மொழி இதற்கு இணையெனக் கூறல் இயலாது. இது மொழியியல் ஆராய்ச்சியாளர் அனைவரும் அறிந்த

உண்மையாகும். பெண்ணுரிமையைப் போற்றும் அகப்பொருள் நுட்பங்களை இலக்கண நூல்களாகவும் இன்சுவைப் பாட்டுக்களாகவும் எடுத்தோதும் சிறப்புடையது இச்சீரிய மொழியே. இத்தகைய மொழியில் பேச்சு வழக்கில் நுழைந்து இடம் பெற்ற குறை எத்தகையது? 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்பது உண்மையே. ஆயின் ஒருநாட்டு மக்களின் உயர்ந்த நாகரிகத்துக்கு இழிவைத் தருவதொன்று புதியதாய்ப் புகுதலும், சிறப்பைத் தருவதொன்று பழையதாய்க் கழிதலும் அழகோ?

ஆணை உயர்த்தப் புகுந்த மக்கள் பெண்ணை உயர்த்தாது விட்டனர்; அவ்வளவில் நிற்காமல், பெண்ணைத் தாழ்த்தவும் தொடங்கினரே! உயர்திணையில் பெண்பாலாக இருந்த ஒருத்தி அஃறிணையில் ஒன்றன்பாலாக ஆயினளே! அவளும் இவளும் 'அது' 'இது' ஆதல், 'வந்தது' 'சொன்னது' எனல்—ஆகிய இவை அறிவிப்பது என்னை? பகுத்தறிவில்லாத ஒன்றையன்றோ அஃறிணை என்று இலக்கணம் கூறுகின்றது? பெண்ணுக்குப் பகுத்தறிவு இல்லையோ?

தெலுங்கில் 'அவள்' இல்லை

தமிழில் இக்குறை பேச்சு வழக்கில்மட்டும் உள்ளது என்னலாம். இலக்கணமாக எழுதுகையில் இதற்கு இடமில்லை. ஆனால், தெலுங்கு, கோண்டு (Gond) இருமொழிகளிலும் ஒருத்தியை உணர்த்தும் பெண்பால் இல்லை. ஒருத்தியைக் குறிக்க அஃறிணை ஒன்றன்பாலையன்றோ வழங்குகின்றனர்? ஒருத்தியைக் குறிக்கும் சுட்டுப் பெயர்களையும் வினைமுற்றுக்களையும் அஃறிணையாகவே அமைத்துள்ளனர். அரசியைக் குறிக்கும்போதும் 'அதி' 'இதி' (அது, இது) என்பர்; திருமகள் கலைமகள் முதலான பெண் தெய்வங்களைக் குறிக்கும் போதும் 'அதி' 'இதி' என்று சுட்டுதல் உண்டு. எத்துணை உயர்வுபெற்ற பெண்ணையும் அஃறிணை ஒருமையாகச் சுட்டுகின்றனர். தெலுங்கில் பெண்பாலைக் குறிக்கும் சில பழஞ் சொற்கள் உள்ளன. ஆனால் அவை அருகி வழங்குகின்றன.

ஆணை அவன் என்றும், அவன் வந்தான் என்றும் கூறும் இலக்கணம் பெண்ணை அது என்றும், அது வந்தது என்றும் கூறுதல் வியப்பன்றோ? பெண்பாற் பெயர்களை அஃறிணைப் பெயர்கள் (அமஹத்) என்றே தெலுங்கு மொழியின் இலக்கணம் கூறுகின்றது. தெலுங்கு பேசும் மக்கள் இருநூறுயிரவர்க்கு மேற்பட்டவர். அனைவரும் இவ்வாறே பேசுகின்றனர்,

'அவள்' என்று தமிழில் உள்ளதுபோலத் தெலுங்கில் ஒரு சொல் இல்லையே. ஆயினும், பெண்டிர் பலரைக் குறிக்கும் போது அவைகள் என்று சொல்லாமல், அவர்கள் என்றே வழங்குகின்றனர்.

தூதவரும் (Tudas) கோடரும் (Kotas) ஆணாயினும் பெண்ணாயினும் விலங்காயினும் கல்லாயினும் அது என்று திணைப்பாகுபாடு இன்றியே கூறுவர். அவர்தம் சுட்டுக்களில் ஆண் பெண் வேறுபாடும் இல்லையாதலின், ஈண்டு ஆராய்தல் வேண்டா.

கால்டுவெல் கருத்து

தமிழில் அமைந்துள்ள மொழியியற் சிறப்புக்களுள் திணைப்பாகுபாடும் ஒன்று. அதனைக்குறித்துக் கால்டுவெல் என்னும் அறிஞர் கூறும் மொழிகள் போற்றற்குரியன :—

"திராவிட மொழிகளின் திணைப்பாகுபாடு இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் செமிடிக் மொழிகளிலும் உள்ள பாகுபாடுபோன்று கற்பனையால் ஆகியது அன்று; சிறந்த தத்துவ உணர்வால் ஆகியது என்பது தெளிவு. என்னை? பகுத்தறிவு உடையவை, பகுத்தறிவு இல்லாதவை என்ற பிரிவு சிறப்பும் இன்றியமையாமையும் உடையதன்றோ"?

"உயிருள்ளனவற்றின் பெயர்களுக்கு ஒரு பன்மை விகுதியும் உயிரில்லனவற்றின் பெயர்களுக்கு மற்றொரு பன்மை விகுதியும் சேர்த்து வழங்குவது பாரசீகமொழி ஒன்றே. அந்த மொழி ஒன்றே திராவிடமொழிகளோடு இவ்வகையில் ஒருபுடை ஒப்புமை உடையதாகும். ஆனால் அந்த ஒப்புமை மிகச் சிறிதே. எனவே, திராவிடமொழிகளின் திணையிலக்கணம் தனிச் சிறப்புடைய தொன்றாகும். இஃது அறிவும் இலக்கணமும் வளர்ந்து மேம்பட்டதன் பயனே ஆகும்."

இவ்விழுமிய கருத்துக்கள் திராவிடமொழிகளின் திணையிலக்கணத்தைப் போற்றுகின்றன. இது திராவிடமொழிகள் எல்லாவற்றிற்கும் உரியதொன்றே; ஆயினும், பிறமொழிக் கலப்பால் கன்னடம், மலையாளம் முதலியன திணையிலக்கணம் இழந்தன. தமிழும் தெலுங்குமே இவ்விலக்கணம் உடையனவாக விளங்குகின்றன. இவற்றுள்ளும், தெலுங்கு, பெண்ணை உயர்திணை எனக் கூறல் மறந்து அஃறிணையாக்கி விட்டது; இலக்கணமும் எழுதிவிட்டது. தமிழோ, பேச்சு வழக்கில் அந்நோய்க்கு இடந்தந்துள்ளது.

[காழிக் கண்ணன்]

அ. திருடர்கள் (தொடர்ச்சி)

சென்ற ரெட்டியார் சிறிது நேரத்தில் திரும்பிவந்தார். அவர் வந்து ஒரு நாழிகைகூட இராது ஆறு போலீஸ் சேவகர்களும், போலீஸ் தலைவரும் ஒரு வண்டியில் வந்திறங்கினார்கள். சேவகர்கள் ஒவ்வொருவர்கையிலும் சனியன்கோத்த துப்பாக்கி யிருந்தது. அவர்கள் இடுப்பிற் கட்டைத்தடி செருகப்பட்டிருந்தது. தலைவரோ பட்டாக்கத்தியும், சுழல் துப்பாக்கியும் வைத்திருந்தார். இவர்களைக்கண்டதும் என்னையும் அறியாமல் என்னுள்ளத்திற் கிளர்ச்சி மிகுந்தது. ஆண்மையும் வீரமும் செறிந்து தோன்றிய இவ்வீரர்கள் திருடர்களைத் திண்ணமாய்ப் பிடித்து என் தோழர்களை விடுவித்துவிடுவார்கள் எனக் கண்டுகொண்டேன்; மகிழ்ச்சி மிகுதியால் ஒரு முக்காரம் போட்டேன்.

"ஐயா, இதுதானா தாங்கள்கூறிய காளை?" என்று ரெட்டியாரைப் போலீஸ் தலைவர் கேட்டார்.

"ஆம்; இதுதான். இதன் பெயர்தான் இராமன். இது ஒன்றுதான் திருடர்கள் கையிற் சிக்காமல் தப்பி வந்தது." என்று விடையளித்தார் ரெட்டியார்.

"எங்கே, மாட்டுக்காரச் சிறுவன் வீரப்பனைத் தயவு செய்து கூப்பிடுங்கள்!" என்று தலைவர் வணக்கத்துடன் கூறினார்.

வீரப்பனும் வந்தான். அவனிடம் நடந்த செய்திகளை விபரமாகக் கேட்டுக்கொண்டார் தலைவர். "எங்களுடன் இச்

சிறுவனும், இக்காளையும் வந்தால் நல்லது" என்று ரெட்டியாரைப் பார்த்துத் தலைவர் கூறினர்.

"ஆகா! நன்ருக அழைத்துச் செல்லுங்கள், அதற்குத் தடையென்ன!" என்று கூறிய ரெட்டியார், "புறப்படுவதற்கு முன் நீங்களெல்லோரும் சிறிது பசியாறிச் செல்லவேண்டும்!" என்று கேட்டுக்கொண்டார்.

எல்லோருக்கும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. களிப்புடன் உண்டபின், யாவரும் பழச்சாறு அருந்தினர். அருந்தி முடிந்ததும், "வீரப்பா, இராமனை ஓட்டிக்கொண்டு, முன்னே செல்! சேவகர்களே, நீங்கள் பின்தொடர்ந்து செல்லுங்கள்! எல்லோரும் கால்நடையாகத்தான் செல்லவேண்டும்!" என்று தலைவர் கட்டளை யிட்டார். அவ்வாறே நாங்கள் புறப்பட்டோம். ரெட்டியாரிடம் விடைபெற்றுக்கொண்டு தலைவர் எங்கள்பின் வந்தார்.

குளக்கரை வந்து சேர்ந்ததும் தலைவர் "ஒருவரும் ஓசை செய்யக்கூடாது!" என்று எச்சரித்துவிட்டுச் சேவகர்களை ஒருவர்பின் ஒருவராக நிற்கச் செய்தார். பின் என்னை மடத்தின் பக்கம் ஓட்டிச்செல்லுமாறு வீரப்பனுக்குக் கட்டளை யிட்டார். அவர் கூறிய தின்னதென்றறிந்த நான் ஓசைபடாமல் முன்னே சென்றேன். "அப்படி! நல்ல காளை இக்காளை!" என்று மெச்சினர் தலைவர். என் பின்னே வீரப்பன் வந்தான். அவன்பின் நூல் பிடித்ததுபோல் ஒரே வரிசையில் ஆறு சேவகர்களும் தலைவரும் அடிமேல் அடிவைத்து வந்தார்கள். மடத்தின் முற்புறமிருந்த சுவரோரம் வந்தவுடன், நான் அதன் கீழ்ப் புறமிருந்த ஒற்றையடிப் பாதையின் குறுக்கே சென்று நின்றுகொண்டேன். தலைவரும் என் கருத்தை உணர்ந்து கொண்டவர்போல், சேவர்களை யெல்லாம் சுவரோடு சுவராய் நின்றுகொள்ளச்செய்து, தாமும் கத்தியை உருவிக்கொண்டார்; பின் வீரப்பனைக் கூப்பிட்டு "நீ ஊருக்கு ஓடி, இன்னும் ஆறு சேவகர்கள் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்று நான் சொன்னதாகச் சொல்லிவிட்டு வா!" என்று பணித்தார். வீரப்பனும் சிட்டாய்ப் பறந்து சென்ருன்.

அவன் தலை மறைந்தவுடன், நான் உரத்த குரலில் "அம்மா-அ-அ-அ-அ" என்று முக்காரம் போட்டேன். சற்றுநேரத்தில் நிலத்தின் கீழிருந்து நாலைந்து காளைகளின் குரல் கேட்டதுபோல் ஓசையொன்று கேட்டது. தலைவர் என்னை மெச்சினவராய்ச் சேவர்களை மீண்டும் எச்சரித்தனர். மடத்தின் மேற்புறமிருந்த புதர் சர சரவென அசைவுற்றது. ஒரு தலை

வெளியில் வந்தது. "ஆ போக்கிரிக் கழுதை! அன்று நீ எப்படியோ தப்பித்துக் கொண்டாயல்லவா! இன்று அது முடியாது" என்று மெதுவாகக் கூறிக்கொண்டே திருடனொருவன் என்னை நோக்கி வந்தான். அவன் என்னருகே வரவர, நான் சிறிதுசிறிதாகப் பின் வாங்கிக் கொண்டே சேவகர்களிருந்த இடம் வந்தேன். "இவ்வளவு தந்திரங் கற்றிருக்கிறாயா நீ?" என்று சினத்துடன் கூறிக்கொண்டே திருடன் என்மீது பாய்ந்தான்; அரை நொடியில் அவன் சேவகர்களாற் குண்டுக்கட்டாய்க் கட்டி உருட்டப்பட்டான்.

மீண்டும் அவ்வொற்றை யடிப்பாதைக்குச் சென்று முன்போல் குரல்கொடுத்தேன் நிலத்தின் கீழிருந்து முன்போல் பதிலோசை பிறந்தது. விரைவில் மற்றொரு திருடன் வந்து சேவகர்களிடம் சிக்கிக்கொண்டான்.

மூன்றும் முறை சென்று முக்காரம் போட்டேன். ஆனால், இம்முறை பதிலோசை ஒன்றுங்கேட்கவில்லை. "சரிதான், திருடர்கள் காளைகளுக்கு மோவாய்க் கயிறு போட்டுவிட்டார்கள்" என்று கண்டுகொண்டேன். எனினும் சற்று நேரத்தில் மற்றொரு தடியன் வந்து முன்போலவே கட்டுண்டான்.

இனி என் சூழ்ச்சி பலிக்காதென்று கண்டுகொண்ட நான் சேவகர்களை மடத்தருகே செல்ல வழிவிட்டு ஒருபுறமாக ஒதுங்கி அடர்ந்த புதரொன்றுள் மறைந்து கொண்டேன். என் கருத்தை அறிந்துகொண்ட தலைவர் உடனே சேவகர்களை முன்னேறிச் சென்று புதர்களிடை மறைந்துகொள்ளுமாறு கட்டளை யிட்டார்.

சற்றுநேரத்தில் ஆறு திருடர்கள் நீண்டகம்புகளுடன் மேற்புறப்புதரைவிட்டு வெளிவந்து மண்டபத்தருகே நின்று சுற்றுமுற்றும் பார்த்தனர். அதே நொடியில் சேவகர்கள் நாற்புறங்களிலிருந்தும் பாய்ந்து அவர்களை வளைத்துக்கொண்டனர். இருதிறத்தாருக்கும் கடுமையான சண்டை நடந்தது. சேவகர்களில் இரண்டொருவருக்குச் சிறு காயமும் ஏற்பட்டது. இருந்தாலும் துப்பாக்கிச் சனியனின்முன் கழியுங் கம்பும் என்ன செய்யமுடியும்! திருடர்கள் அறுவரும் பிடிபட்டுவிட்டனர். அவர்களையும் சேவர்கள் கட்டித் தூக்கிவந்து சுவருக்கப்புறம் கட்டுண்டுகிடந்த மற்றைத் திருடர்களுடன் சேர்த்துவிட்டனர்.

ஆ! அதென்ன! மேற்புறமிருந்த புதர்கள் நெருப்புப் பிடித்தெரிகின்றனவே! "ஆகா! அந்தப் பயல்கள் நம்மை ஏய்க்கப் பார்க்கிறார்கள்! தீப்பிடித்துக்கொண்டதைக் கண்ட

வுடன் நாம் எல்லோரும் இங்குமங்கும் ஓடுவோம்; அச்சமயத்தில் ஓடிவந்து தங்களுடைய தோழர்களை மீட்டுக்கொள்ளலாமென்று கருதிச்செய்யும் சூழ்ச்சி இது. அவ்வளவு இளிச்சவாயனா நான்? சேவகர்களே, நீங்கள் அப்புறம் இப்புறம் அசையாமல் இத்திருடர்களைக் காத்து நில்லுங்கள்!'' என்று கட்டளையிட்டார் தலைவர். அவருடைய நுண்ணறிவைக்கண்டு நான் வியந்தேன். அவர் கருதியதுபோல்தான் திருடர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்போலும்! சற்றுநேரத்தில் பாழ் மண்டபத்தின் பின்புறமிருந்து ஏழெட்டுத் திருடர்கள் நாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை நெருங்கினர். அதே சமயத்தில், வீரப்பன் ஆறு சேவகர்களுடன் அங்குவந்து சேர்ந்தான். ஆகவே, வந்த திருடர்களைப் பிடிப்பது மிகவும் எளிதாகிவிட்டது.

பின், சிறிதுநேரம் தலைவர் காத்திருந்தனர்; வேறு திருடர்கள் வருவதாகக் காணவில்லையாகையால், புதிதாய்வந்த சேவகர்களை அழைத்துக் கொண்டு மடத்தின் பின்புறம் சென்றார். நானும் புதரை விட்டு வெளியே வந்து அவரைப்பின்தொடர்ந்தேன். இடிந்த பாழ்மடத்தின் பிற்புறம் பெரியதொரு பள்ளமிருந்தது. அப்பள்ளம் மடத்திலிருந்து பார்த்தால் தெரியாதபடி மரங்கள் வளர்ந்து மறைத்துக் கொண்டிருந்தன. அம்மரங்களிடையே அப்பள்ளத்திற்குள் இறங்கிச் செல்லும் படிக்கட்டு ஒன்று காணப்பட்டது. குறைந்தது நாற்பதைம்பது படிகளாவது இருத்தல் வேண்டும். எல்லோரும் எச்சரிக்கையுடன் இறங்கிச் சென்றோம். கீழே சிறு சிறு அறைகளாகப் பல அறைகள் காணப்பட்டன. முன் அம்மடத்திலிருந்த ஞானிகள் புறத்தொடர்பின்றிக் கடவுளைத் தனியாகத்தொழுவதற்காகக் கட்டப்பட்ட அறைகளே அவை. இப்பொழுதோ அவற்றுள் காளைமாடுகள் கட்டப்பட்டிருந்தன. நாற்பத்திரண்டு காளைகள் இருந்தன. ஒவ்வொன்றும் மோவாய்க்கயிறு போடப்பட்டிருந்தது. அதனால்தான் அவை குரல் கொடுக்கவில்லைபோலும், என்று நான் முன் கருதியது சரியாயிருக்கக்கண்டு சற்றுப் பெருமிதங்கொண்டேன். காளைகளை அப்படிக்காட்டின்வழியே அழைத்துச் செல்வது கடினமென்று கண்டே திருடர்கள் மேற்புறமிருந்த புதரிடை அவை கீழே செல்வதற்குச் சரிவுபாதை அமைத்திருந்தார்கள் என்பதையும் எளிதிற் கண்டுகொண்டேன். கடைசியிலிருந்த ஓரறையில் மட்டும் நாலைந்துபேர் கைகால்களில் விலங்கிடப்பட்டுக்கிடந்தனர். அவர்களைச் சேவகர்கள் விலங்கைத் தறித்து வெளியே அழைத்துவந்தனர். தாங்கள் இழந்த காளைகளைத் தேடிவந்து இவர்கள் திருடர்கள்

கையிற் சிக்கிக்கொண்டவர்கள். இவர்களைத் தவிர்ந்து வேறொருவரும் அங்குக் காணப்படவில்லை. ஆகவே, அம்மனிதர்களையும் காளைகளையும் அழைத்துக்கொண்டு நாங்கள் திரும்பினோம்.

விரைவில் திருடர்களை யெல்லாம் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு, காளைகளையும் ஓட்டிக்கொண்டு சேவகர்கள் ஊருக்குப் புறப்பட்டனர். தலைவர் மட்டும் என்னைத் தட்டிக்கொடுத்தவராய் என்னுடனேயே வந்தார்.

ஊர் வந்ததும், செட்டியாரிடம் என்னைப்பற்றித் தலைவர் இவ்வளவுதான் புகழ்ந்து கூறினார் என்று சொல்வதற்கில்லை. "இராமன் இல்லாவிட்டால் திருடர்களைப் பிடிக்கப்போய் நாங்களே பிடிப்பட்டு நிலவறையில் அடைபட்டிருப்போம்" என்று அவர் வெளிப்படையாகக் கூறினார். நாலைந்து நாட்கள் வரை ஊரெங்கும் நான் திருடர்களைப் பிடித்துக் கொடுத்ததைப்பற்றிய பேச்சுதான். மக்கள் தேர் திருவிழாவிற்கு வருவது போல் வந்து வந்து என்னைப்பார்த்து மெச்சிச் சென்றார்கள்.

மதிப்புரை

திருக்கச்சூர் ஆலக்கோயிற் புராணம்: வெண்பாப்புலி திரு. வேலுசாமிப் பிள்ளையவர்கள் இயற்றியது. மணப்பாக்கம் திரு. தங்கவேல் முதலியாரவர்கள் பதிப்பித்தது. சிங்கப்பெருமாள் கோயிலுக்கருகேயுள்ள பாடல்பெற்ற கோயிலாகிய திருக்கச்சூர் ஆலக்கோயிற் சிறப்பை விளக்குவது. விலை அணா 6.

மாணவர் திருக்குறள் நூறு: வாலாஜாபாத் இந்துமத பாடசாலை நூல் வெளியீடு. பொழிப்புரையுடன் கூடியது. திரு நா. ப. தணிகையரசு தொகுத்தது. இந்நினைவு வெளியீடு புதுவயல் தனவணிகப் பெருமானார் திரு. சித. வயி. வயி. வயிரவன் செட்டியார் உதவியால் வெளிவந்ததாகும்.

செய்திகளும் குறிப்புக்களும்

கம்பர் திருநாள்

1935-ஆம் ஆண்டு, சென்னை திருவள்ளுவர் திருநாட் கழகத்தார் சிறப்பாகத் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடித் தமிழ்நாட்டில் புலவரைப் போற்றும் புதியதோர் உணர்ச்சியை எழுப்புவித்தனர். அதுமுதல் ஒவ்வோராண்டும் திருவள்ளுவர் திருநாள் செந்தமிழ் நாட்டிற் பல ஊர்களில் தவறாமற் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதே முறையில் இவ்வாண்டு கம்பர் திருநாளும் பல இடங்களிற் கொண்டப்பெற்றது. இது தமிழ் நாட்டின் கலைவளர்ச்சிக்கு ஓர் அறிகுறி யென்றே கூறுதல் வேண்டும். காரைக்குடியில் சென்ற

மார்ச்ச 21, 22 23, 24-ஆம் நாட்களில் பல தமிழ்ப் புலவர்களும், ஆராய்ச்சி யறிஞர்களும் சிறப்பாக இந்நாளைக் கொண்டாடினர். கம்பரது பெருமையும் கம்பராமாயணச் சிறப்பும் பலபடப் பாராட்டி விளக்கி யுரைக்கப்பட்டன. இத்தகைய சிறந்த முயற்சியி லீடுபட்டு ழைத்த தமிழ்ப் பெரியா ரெல்லோருக்கும் எந்நன்றி உரியதாகுக. இனி ஒவ்வோராண்டும் இத்திருநாள் தவறாமல் நடைபெற வேண்டுமென்றும், இதைப்போன்ற ஏனைய புலவர்கள் திருநாள்களும் கொண்டாடப்பட வேண்டுமென்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

திருப்பனந்தாள் தமிழ்ப் பரிசுகள்

திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவர் உயர்திரு. காசிவாசி சுவாமிநாத தம்பிரான் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் தனித்தமிழ் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சி பெறுவோருக்கு ஆயிர ரூபாய் ஆண்டுதோறும் பரிசளிக்குமாறு செய்துள்ள சிறந்த ஏற்பாடு தமிழுலகம் நன்கறிந்ததே.

அறிவிலும் கொடையிலும் தமிழார்வத்திலும் சிறந்த சுவாமிகள் இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தேவார திருமுறைக் கல்வி வளர்ச்சி குறித்தும் தமிழ் இலக்கியக் குறைந்தவிலை வெளியீடுகள் குறித்தும் ஆண்டுதோறும் முறையே ரூ. 500-ம் ரூ. 1250-ம் பரிசாக அளிக்கத் திட்டம் ஒன்றும் வகுத்து ரூ. 75,000 பெறுமானமுள்ள நிலங்களை வாங்கிப் பல்கலைக் கழகத்தாரிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள். சுவாமிகளின் கொடைமடம் சிறந்தோங்குக! அவர்கள் தம் தமிழார்வம் ஏனைய தமிழ்ப் பெருமக்கட்கு எடுத்துக்காட்டாக இலகுக! அவர்கள்தம் சமயப் பாதுகாப்புப் பிற மடத்தார்க்கு வழிகாட்டியாகுக!

அறிவிப்பு

தென்னிந்திய தமிழ்ச்சங்கம் திருநெல்வேலி
தனித்தமிழ்த் தேர்வுகள்

இச்சங்கத்தாரால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டுவரும் தனித்தமிழ்த் தேர்வுகள் நிகழும் 1940-ம் யாண்டுக்கு நாளது ஜுன் மாதம் 27, 28, 29-க்குச் சரியான நிகழும் மெய்கண்டான் யாண்டு எகள ஆனித்திங்கள் 20-21-22 வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் திருநெல்வேலி, ஆரணி, திருச்சி, சிதம்பரம், சென்னை, திருவனந்தபுரம், யாழ்ப்பாணம் ஆகிய தலைநகர்களிலும் ஐவர்க்குக் குறையாது விண்ணப்பஞ் சேரும் பிற இடங்களிலும் நடைபெறும். 'தமிழ்த் தேர்வுக்கு ரூபாய் ஒன்றும் இளந்தமிழ்ப் புலவர்க்கு ரூபாய் 2-ம் தமிழ்ப்புலவர் பொதுவுக்கு ரூபாய் மூன்றும் கட்டணமாம்.

விண்ணப்பங்கள் மே, மாதம் 20-ந் தேதிக்குள் அமைச்சர்க்கு வந்து சேரவேண்டும். 1941-ம் வருடமுதலே பாடமாறுதலேற்படும்.

அன்புள்ள.

பு. சி. புன்னைவன நாதன்,

அமைச்சர்,